# ரோஜா



சித்திரை – வைகாசி 1995 மலர்-2 இதழ் -7

$1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூர் குமரன்

சாறீஸ் அன் பாஷன்

(416) 285-6797
(416) 924-5329

* பனாரஸ்
* காஞ்சிபுரம்
* மைசூர் சில்க்
* 5 COLOUR SAREES
* சிருவின் சாறீஸ்

# NALLUR KUMARAN
## SAREE PALACE

A Div. of RISHIS IMPORTING

2387 Eglinton Ave. E., Suit. 6 (1st Floor)
(Eglinton/Kennedy) Beckers இந்கு மேல்

ரோஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கிய மாத மலர்

# ரோஜா

மலர். 2 இதழ். 7

**மே 15, 95 - ஜூன் 14, 95**


ஆசிரியர்.
***வி. எல். ஆனந்த்.***

பிரசுரம்/விளம்பரம்/விநியோகம்.
***'ரோஜா' பப்ளிக்கேஷன்ஸ்***

வடிவமைப்பு/அச்சமைப்பு
***எல். கிரிஷோத் ரைப்செட்டிங்***

அட்டை வடிவமைப்பு.
***கரன் கிராப்***

அச்சுவேலை.
***எல். கிரிஷோத் ரைப்செட்டிங்***
***பரடைஸ் அச்சகம்***


ஓவியம்.
***ருபி***
***கருணா***



**Articles/Advertisements**
**TEL: (416) 425 2884**
**FAX: (416) 425 2625**

**Address:-**

**"ROJAH"**
**F.P.P.O., P.O.BOX 45593,**
**747 DON MILLS RD,**
**DON MILLS,**
**ON. M3C 3S4. CANADA.**

# அன்பரங்கம்

அன்பு நெஞ்சங்களே!

ஈழத்தில் நடைபெற்றுவரும் போராட்டத்தில் பெற்றோர்களை இழந்து அநாதரவாக்கப்பட்ட பிஞ்சு உள்ளங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இப்படி அநாதரவாக்கப்பட்ட குழந்தைகள், சில அமைப்புக்களாலும், தனியார்களாலும் நடத்தப்படும் அநாதை விடுதிகளில் வாழ்வதும் நீங்கள் அறிவீர்கள். இந்த அநாதை விடுதிகளில் ஒன்றான....

திருமலை **'அன்பு இல்லம்'** திக்குத் தெரியாத சிறார்களின் வாழ்விடம். இங்கே 152 அநாதைச் சிறார்களைத் திரு. சுந்தரலிங்கம் அவர்களும் மனைவியாரும் பராமரித்து வருகின்றனர். இந்த அநாதைச் சிறார்களின் தொடர்வாழ்வுக்கு உதவுவதற்காக 'ரோஜா', 'இளையநிலா', 'கரன் கிறாப்' ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து **"அன்பரங்கம்"** தமிழ்க் கலைஞர் விழாவை ஒழுங்கு செய்துள்ளன. உங்கள் அன்புக் கரங்களால் உதவி இச் சிறார்களின் தொடர்வாழ்வுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**~ வி. எல். ஆனந்த்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழமைபோல இந்த ஓவியத்திற்குள் கவிதைமட்டுமல்ல
ஒரு சோக கதையும் புதைந்துகிடக்கிறது.
கவிதை மறு பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்துள்ள இனவெறியைக் கழுவிடுவோம்.

குகப்பிரியா

இவர்கள்
இனவாத நெருப்பினால் எரிந்துபோன மொட்டுக்கள்!
முளைப்பதற்கு முன்னரே
இவர்களின் இறக்கைகள் முறிக்கப்பட்டன!
இனவெறிக் கயிற்றினால்
பெற்றவரின் உயிர்கள் பறிக்கப்பட்டன!
மனிதத்தைத் தொலைத்த "ம(னி)தங்களினால்"
இவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன!
இவர்களின் புண்களில் மட்டுமல்ல!...
கண்களில் வடிவதுகூட ரத்தம்தான்!...
தொப்புள்கொடி உறவுகள் தொலைந்துபோனதால்
எதிர்காலத்தை இவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்!..
பள்ளிப் புத்தகங்களைப் பறிகொடுத்துவிட்டு
பசி, பசியென்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள்!...
அக்கினியைக்கூடச் சுட்டுவிடக்கூடிய
பட்டினி நெருப்பை மூட்டியவர் யார்?.....
கொலைசெய்தவன் கூண்டுக்கு வெளியேநிற்க
ஆயுள்தண்டனையை இவர்கள் அனுபவிக்கிறார்கள்!..

வாருங்கள்!
தறிக்கப்பட்ட இவர்களின் ஏதிர்காலத்தை
மீண்டும் தளிர்விடச் செய்வோம்!...
முறிக்கப்பட்ட சின்னச்சிறகுகளை
மீண்டும் முளைவிடச் செய்வோம்!...
அனாதைகள் என்ற சொற்பதத்தை
இவர்களின் அகராதியிலிருந்து அழித்துவிடுவோம்!
காற்றில் கலந்துள்ள இனவெறியைக் கழுவிவிட்டு
சுத்தக் காற்றைச் சுவாசிக்கச் செய்வோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## 3. கணேச வித்தியாசாலை

எனது முறையான கல்வி 1939ல் நுணா விலூரிலுள்ள கணேச வித்தியாசாலையில் ஆரம்பமாகியது. திரு. சிவம் கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப் பாடசாலையைப் பற்றி நிறையவே எழுதலாம். ஆனால் எனது பிற்கால இலக்கிய வாழ்வுக்கு இப்பாடசாலை எந்த அளவுக்கு உதவியது என்பதனை மட்டுமே கேள்விக் குறியாக்கி விடையளிக்க விரும்புகின்றேன். திரு. சிவம் கந்தையா, திரு. காசிப்பிள்ளை கந்தையா, திருமதி. இரத்தினம் மாணிக்கவாசகர் ஆகியோ ரிடம் இவ்வித்தியாசாலையில் தமிழ் படிக்கும் வாய்ப்பு கிட்டியது. தமிழ் மட்டும் தான் என்று இல்லை. ஏனைய பாடங் களையும் அவர்களே படிப்பித்தார்கள். ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை மட்டும் எல்லா வகுப்புக்களிலும் ஆங்கிலத்தையே படிப்பித்தார்.

அந்தக் காலத்து ஆசிரியர்கள் மாணவர் கள் கல்வியில் காட்டிய கவனம், பெற்ற பிள்ளைக்கு பாலூட்டும் கவனம்.

எனக்கு முன்னாலேயே எனது தம்பி திரு. வி. கணபதிப்பிள்ளையை ஆங்கிலக் கல்லூரிக்கு அனுப்பி விட்டார்கள். அவன் படிப்பில் மிகவும் கெட்டித்தனம் காட்டி னான். நான் படு குழப்படி; பாடசாலைக்கு ஒழுங்காகப் போகமாட்டேன். அதனால் அவனையே ஆங்கிலப்படிப்புக்கு தெரிவு செய்து விட்டார் எம்மை வளர்த்த மாம னார், என்று அப்பொழுது நினைத்தேன். ஆனால் அது பிழை என்பது எனக்கு பின்னால் தெரிய வந்தது. என்னை அங்கேயே சிலகாலம் படிக்க விடும்படி தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டாராம். பலரும் ஆங்கிலப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்ப விரும்பியதால் தமிழ்ப் பாடசாலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆசிரியர் பெற்றோர்களைக் கெஞ்சி தமிழ்ப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்த்த காலம் அது. எனினும் திரு. சிவம் கந்தையா அவர்கள் கெஞ்சியிருக்கமாட்டார்கள். அவர் தனிப்பெருந் தலைவர். பல காலமாகச் சாவகச்சேரிப் பட்டினசாலையில் எமது ஊரைப் போட்டியின்றிப் பிரதிநிதித்துவம் செய்த பெரியார். அவர் கட்டளையிட் டிருப்பார். அதற்குப் பணிந்து என்னை கணேச வித்தியாசாலையிலே விட்டு விட்டார்கள் என் மூத்தோர். கணேசப் பெருமானின் அருள் போலும் 7ம் வகுப்பு வரை நான் இங்கு தமிழ் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

கீழ் வகுப்புக்களில் எனக்கு தமிழ் படிப்பித்தவர் திருமதி. இரத்தினம் மாணிக்கவாசகர்; எனது உறவினர். ஆத்தி சூடியையும், கொன்றை வேந்தனையும் பாடமாக்கப் பண்ணியவர். விளங்கியதோ விளங்கவில்லையோ முழுவதையும் பாடமாக்கி ஒப்புவிக்க வேண்டும். அந்தக் காலத்தில் மனப்பாடம் செய்வித்தல் கற்பித்தலின் முக்கியவோர் அம்சம். நன்கு பாடமாக்கிச் சொல்பவன் மூளைசாலி; பாடமாக்காதவன் மக்கு. வாசிப்பிலும் ழகர ரகர பேதங்களிலும் இவர் அக்கறை காட்டினார். வெய்யில், காய்ச்சல், கறுப்புப் போன்ற சொற் களைத் தந்து எழுத்துப் பிழைகளைத் திருத்தும் வேலைகளை நிறையவே தருவார்.

ஆறாம் வகுப்பில் தமிழ் படிப்பித்தவர் தலைமை ஆசிரியர் திரு. சிவம் கந்தையா அவர்கள். சொற்களைச் சரியானபடி பிரயோகிக்கக் கற்பித்தவர் இவர். 'என்ன சாப்பிட்டாய்?' என்று கேட்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பழஞ்சோறு தின்றனான்' என்றால் அவருக்குக் கோபம் வந்துவிடும். பழஞ்சோற்றுக்காகவல்ல; 'தின்றனான்' என்பதற்காக. என்னுடைய கேள்வியில் சாப்பிட்டாய் என்ற சொல் இருக்க உன்னுடைய மறுமொழியில் 'தின்றனான்' என்கிறாய். நீ ஒரு மாடு. அதாவது, மாடுதான் தின்னும்; மனிதர் சாப்பிடுவர் என்பார்'. இவர் எமக்குப் படிப்பித்த சில சொற் பிரயோகங்கள்;

நீறு - அணிதல்
பாடம் - படிப்பித்தல்
வேதம் - ஓதுதல்
விளக்கு - ஏற்றுதல்
நீர் - அருந்துதல்
பால் - பருகுதல்
உணவு - உண்ணுதல்
பழம் - சுவைத்தல்
தாம்பூலம் - தரித்தல்

இக்காலத்தில் எழுத்தாளர்கள் கூட இவ்வளவு நுணுக்கமாக சொற்களைத் தெரிவு செய்வதில்லை. 'விளக்கைக் கொளுத்தி, மதுவை அருந்தி, நீரைக் குடித்தல்....' போன்ற வழக்குகள் சர்வசாதாரணமாகி விட்டன.

ஒருமுறை "குனிந்தால் நிமிர வேண்டும், இருந்தால் எழும்ப வேண்டும், விழுந்தால்...." என்று கேட்டு பாடத்தை முடித்துச் சரியான சொல்லுடன் மறுநாள் வரவேண்டும் என்று பணித்து விட்டார். வீட்டுக்குப் போகும் பொழுது பொருத்தமான சொற்கள் பற்றி ஆராய்ந்து கொண்டு சென்றோம். ஒருவர் விழுந்தால் அழவேண்டும் என்றார். இன்னொருவர் கிடக்க வேண்டுமென்றார். இப்படியே முறிய வேண்டும் வெடிக்க வேண்டும் என்ற சொற்களும் முன்வைக்கப்பட்டன. அப்பொழுது யுத்த காலம். குண்டு விழுந்தால் வெடிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவே பொருத்தமானதாகப் பட்டது. நான் 'விழுந்தால் எழும்ப வேண்டும்' என்று சொன்னதை ஒருவரும் ஏற்றுக் கொள்ள வில்லை. "அது தான் இருந்தாலுக்கு வரும் என்று வாத்தியாரே சொல்லி விட்டார். பிறகு எப்படி விழுந்தாலுக்கு வரும்" என்று கேட்டு என் வாயைப் பொத்தி விட்டார்கள்.

எனினும், என்னைக் கேட்டால் 'விழுந்தால் எழும்ப வேண்டும்' என்பதையே சொல்வதாக நான் தீர்மானித்திருந்தேன். ஆனால், அடுத்தநாள் உபாத்தியாயர் அதுபற்றி ஒன்றும் கேட்கவேயில்லை. மறந்து விட்டாரோ அல்லது வேண்டு மென்றே எமக்குள் ஓர் ஆராய்வுத் திறனைத் தூண்டிவிட்டு அவ்வளவில் நிறுத்திக் கொண்டாரோ என்பது சரியாகத் தெரியாது. சரியான சொல் எது என்று நாங்களும் அவரைக் கேட்கவில்லை. அக்காலத்தில் நாங்கள் ஆசிரியர்களைக் கேள்விகள் கேட்பதில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்பதே எமது தொழிலாக இருந்தது.

ஏழாம் வகுப்பில் தமிழ் கற்பித்த திரு. காசிப்பிள்ளை கந்தையா உபாத்தியாயர் பல கதைகள் சொல்வார். - இலக்கியக் கதைகள். கதையின் முடிவில் கரும் பலகையில் ஒரு பாட்டு எழுதுவார். பாட்டை விளக்குவதற்குத்தான் கதை. கதையைச் சொல்லும் போதே பாட்டில் வரும் சொற்களைப் பயன்படுத்துவார். பின்னர் கரும்பலகையில் பாட்டைப் பார்க்கும்போது பழக்கமான ஒரு பாட்டைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். அவர் கூறிய சுவையான கதைகளில் இதுவும் ஒன்று:

தமிழில் எட்டு என்ற இலக்கத்தை 'அ' என்று எழுதுவோம். காற்பங்கு 'வ' என்ற எழுத்தாற் குறிக்கப்படும். 'அவ' என்றால் எட்டேகால். எட்டேகால் மானம் என்றால் அவமானம் என்று பொருள். ஒட்டக்கூத்தர் என்ற புலவர் ஔவையாரை அவமானப் படுத்தவேண்டுமென நினைத்தார். ஔவையார் ஒட்டக்கூத்தரை மதிப்ப தில்லை. அதனால் அவர் ஒரு தற்பெருமை கொண்ட புலவர் என ஒட்டக்கூத்தனார் கருதினார். ஒருமுறை ஔவையார் கேட்ட கேள்விக்குப் பாட்டிலே பதிலளித்த ஒட்டக்கூத்தர், பாட்டின் இறுதியில் 'அ' என்ற சொல்லை வைத்து முடித்தார். அது ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட கேள்விக்கு மறுமொழி போலவும் அதே நேரத்தில் அவரை 'அடியே' என்று அழைப்பது போலவும் இரு பொருள் பட இருந்தது. ஒளவைப் பிராட்டிக்கு இது விளங்காமலா போகும்? உடனே ஒட்டக்கூத்தரை எட்டேகால் லட்சணமே என்று திட்டினார். அத்துடன் அவர் நின்று விடவில்லை. எமன் ஏறி வருகின்ற பரியே - அதாவது எருமையே, மட்டில் பெரிய மூதேவியின் வாகனமே - அதாவது விளக்குமாறே, பாழடைந்த வீடே, குலராமன் தூதுவனாய குரங்கே யாரையடா அப்படிச் சொன்னாய் என்று பொழிந்து தள்ளினார். ஒட்டக்கூத்தரின் ஓர் 'அடி'க்கு ஒளவையார் இப்படி உதை உதைத்தார்:

எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்ட முட்டக்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
யாரையடா சொன்னாய் அது

எந்தப் பாடப்புத்தகத்தைப் படிப்பித்தார் என்று சரியாக நினைவில்லை. பாடப் புத்தகங்களை வாங்கும்படி அக்கால ஆசிரியர்கள் மாணவர்களை நெருக்குவதில்லை. ஒரு பாடப் புத்தகத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டு படிப்பிப்பார்கள். முக்கியமான விடயங்களைக் கரும்பலகையில் எழுதுவார்கள். நாங்கள் பார்த்து எழுதிக் கொள்வோம்.

மனப்பாடம் செய்விப்பதும் மேல்வகுப்புக்களிலும் ஓர் உத்தி முறையாக இருந்தது. எங்களுக்கும் அதுவே பொழுதுபோக்காக இருந்தது. இத்தகைய மனப்பாடப் பயிற்சி எனது நினைவாற்றலுக்குப் பிற்காலத்தில் உறுதுணையா இருந்தது என்றால் மிகையாகாது.

இதுபோக, என்னுடைய தம்பி தான் படிக்கும் இறிபேக் கல்லூரி பற்றி அடிக்கடி புளுகுவான். புளுகினாற் பரவாயில்லை. என்னுடைய பாடசாலையைப் பற்றிக் குறைவாகப் பேசுவான். தன்னுடையது பெரிய கல்லூரியாம்; என்னுடையது குட்டி பள்ளிக்கூடமாம்; அங்கு பல விளையாட்டுக்கள் உண்டாம்; இங்கே ஒன்றும் இல்லையாம். அவன் சொன்னது முழுக்க முழுக்க உண்மை. ஆயின் உண்மைகளைச் சொல்லும் பொழுதும் மற்றவர்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் வகையில் சொல்லலாகாது. எனக்கு என்னவோ அவன் என்னைப் பகிடி பண்ணுவது போல இருந்தது. கோவப்பட்டு ஒருநாள் "எட்டேகால் லட்சணத்தை..." அவன் மேல் அவிழ்த்து விட்டேன்.

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் பொருளைச் சொன்னேன். சொன்னால் தானே உறைக்கும். அவலட்சணமே என்பதற்குப் பொறுமையாக இருந்தான். எருமையே குரங்கே என்றதும் அவன் ஆத்திரப்பட்டு என்னை அடிக்கவர..... நான் ஓட.... இப்படி விளையாட்டிலும் என்தமிழ் விளையலாயிற்று.

★★★

## நான் சொல்லமாட்டேன்
## அதைமட்டும்
## நான் சொல்லமாட்டேன்

கனடாவில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டுமல்ல இந்தியாவிலிருந்து வரும் சஞ்சிகையில்கூட எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

எல்லாப் பத்திரிகை, சஞ்சிகை வெளியீட்டாளர்களும் எழுத்துப் பிழைகளை குறைப்பதற்கு ஆன முயற்சிகளை செய்து கொண்டு இருக்கின்றனர். ஆனால்.......

விஜயகுமார், சசி 'தமிழில் ஸ்பெல் செக்கை' கண்டுபிடிக்கும்வரை பத்திரிகையில் எழுத்துப் பிழையைப் பார்த்து பார்த்து ஆத்திரப்பட்டுக்கொண்டிருப்போம்......

சொல்பவர் சொல்வதற்காக கேட்பவர் உடன் நடவடிக்கையில் இறங்கிவிடுவார்களா... என்ன?......

மோதவிடுவதாகச் சொல்லி தாமே மோதிக்கொள்வது சிலருக்கு........ இதை இங்கு நான் சொல்லமாட்டேன்.



- மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிக்க முன் தப்புக் கணக்கு போடாதீர்கள்

கீழே நின்று அண்ணாந்து பார்த்தேன்
எவ்வளவு அழகு
பார்த்து ரசித்தேன்.
ஒரு தரம் அந்த சுகத்தை
அனுபவிக்கத் துடித்தேன்.
அங்கு செல்ல பணம்
என்று அறிந்தேன்
அதிகவில்லை ஆதலால் திரும்பலாம்
என்று நினைத்தேன்
என்மனம் அலைபாய
பார்த்துவிட துடித்தேன்.
பணத்தை கொடுத்துவிட்டு
உள்ளே போனேன்
இறக்கையை கட்டிய உணர்ச்சியுடன்
மேலே சென்றேன்
போகின்ற வேகம் சொர்க்கத்தில்
இருப்பதாக உணர்ந்தேன்
திடீரென்று உச்சியை தொடமுன்
நின்றது
மீதி தூரம் செல்ல மீண்டும்
விலை என்றது
திரும்பலாம் என்றால் மனம்
அலைபாய்ந்தது
என்னதான் மேலே என
அறியத் துடித்தது
மீண்டும் பொறுக்கிக் கொடுக்க
மேலே சென்றது.
அங்கே நான் நினைத்தளவு
ஒன்றும் இல்லை
பணத்தை வீணாக்கிய அளவு
CN Tower இல் ஒன்றும் இல்லை.
உயரம், உலகத்திலேயே
உயரம் அவ்வளவுதான்
ஆர்வத்துடன் ஓடி வந்து
அமைதியுடன் திரும்பிப் போனேன்.

~ ஆர். மோகன்

## திருடாதே

பெண்ணே!
என் இதயத்தை
திருடி விட்டாய் - அதனால்
இன்று முதல் உன்னை
என்னுள் சிறை வைக்கப்
போகின்றேன்.
கண்ணே!
காரணங்கள் காட்டி
வெளியே வந்து விடாதே!
வந்தாலும் மீண்டும்
என் இதயத்தை
தந்து விடாதே!
தந்தாலும் மீண்டும்
காளையர்களின்
இதயத்தை திருடாதே!
ஏனென்றால் - நீ
திருப்பிக் கொடுக்கும்
இதயமெல்லாம் மீண்டும்
இயங்க முடியாமல்
நொருங்கிப் போயல்லவா
வருகின்றது.

~ S.சுதா

**"சங்கமம் - 95"**

இயல், இசை, நாடகம்

கடந்த ஆண்டு மிஸிசாகாவிலும், ஸ்காபுரோவிலும் அநேகரின் ஆதரவைப் பெற்ற 'சங்கமம்' இவ்வாண்டும் ஸ்காபுரோ சேடபரே கல்லூரி மண்டபத்தில் ஜீன் 24 சனிக்கிழமை (மட்டுமே) நடைபெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசிக்கும் இதயங்களிடம் ஒரு யாசிப்பு

## என் பேனாவின் பிரசவங்கள்

எங்கள் சொந்த மண்ணில் சுதந்திரம் வதைக்கப்பட்டதால் இன்று தமிழினம் உலக நாடுகள் பலவற்றில் விதைக்கப்பட்டது.

விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து இன்று விருட்சங்களாக வியாபித்து நிற்கின்றன..... ஆனால், கொடுமை! விதைகள் தாம் பிறந்த விதை நிலத்தை மறந்து போயின.

மண்ணில் மறைந்த அத்திவாரத்தை கட்டிடங்கள் மறந்து போகுமா? இது நிஜமா? இல்லை! பிறந்த மண்ணையும், பெற்ற தாயையும் மறந்தவர்கள் இந்த உலகில் இறந்துபோனவர்களாகவே கருதப்படுவார்கள். பிறந்த மண்ணையும், அங்கு இறந்து கொண்டிருக்கும் எம்மவர்களையும் நாம் மறந்துபோனது நிஜம்தானா?

இல்லை! எம் இதயத்தின் எங்கோ ஒரு ஓரத்தில் மண்ணின் நினைவுகள் மங்கலாகத் தெரிகின்றன. தூசி படர்ந்த சிற்பமாக, பாசி படர்ந்த பாறையாக அவை மறைக்கப்பட்டிருக்கின்றன.

நீறுபூத்த அந்த நெருப்பை நீரூற்றி அணைக்கவல்ல, காற்றூதி அதைக்கனன்று எரியச் செய்யவே என்பேனா இன்று பிரசவிக்கிறது!

எங்கள் ஒவ்வொருவரின் இதயத்தினுள்ளும் இருக்கும் எமது மண் பற்றிய எரிமலை வெடித்து, மனிதம் பற்றிய நேசிப்பு இந்தப் பூமியெங்கும் பிரவகித்து ஓட இது ஒரு முயற்சி.

இனப்போராட்டத்தின் எச்சங்களாய் விழுந்து விட்ட, விழுந்து கொண்டிருக்கும் வேதனைகள் ஏராளம்! கூட்டம் போட்டு கொடிகள் கட்டி ஒட்டுக் கேட்கும் உத்தமர்களின் இனவாதத் துப்பல்களின் எச்சங்களிவை!

இனவாதம் இதை மட்டுமா செய்தது? குத்துவிளக்கை ஏற்றி வைக்க வேண்டியவர்கள் குடிசையையே எரித்தது போல, மனித நேசத்தை வளர்க்க வேண்டியவர்கள், மனிதத்துக்கே பாசக்கயிற்றை வீசினார்கள்.

**• நிலா குகதாசன் •**

இனவாத நெருப்பின் கனலில் எரிந்து போனவை ஏராளம்! அப்பாவி மக்கள் இனவாத ஊசி ஏற்றப்பட்டு, மனித நேயத்தை மனங்களிலிருந்து இறக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார்கள். மருந்து போடவேண்டிய வைத்தியர்கள் காயத்துக்கு கட்டுப் போடாமல், காலை வெட்டியெடுக்க வழி செய்தார்கள்....... விளைவு!


பல மொட்டுக்கள் முகிழ்ந்து மலராக முன்னரே சிதைக்கப்பட்டன. விதைக் கப்பட வேண்டிய விதைகள் விதைப் பதற்குப் பதிலாக அடுப்பில் வைத்து வ(ை)தக்கப்பட்டன!

கொண்டவனைப் பிரிந்தவர்கள் ஒரு புறம், குண்டுகளால் பிரிந்தவர்கள் ஒரு புறம்.... தாயைப் பிரிந்த மழலை, தந்தையைப் பிரிந்த விடலை, இப்படிக் கதைகள் ஏராளம்..

இனவெறி நெருப்பில் எரிந்த கதைகள் ஏராளம்.

யாரோ விதைத்த விதைகளை இன்று யாரோ அறுவடை செய்ய வேண்டிய நிலை... இந்த நிலைக்கு யார் காரணம்?.... எப்படித் தீர்ப்பது என்று காலத்தைச் செலவு செய்வதை விட முக்கியமான ஒரு காரியமுள்ளது. போராட்டத்தின் எச்சங்களாய் புறக் கணிக்கப்பட்டுள்ள அநாதரவான அபலைகளுக்கு கரம் கொடுக்கும் சிரமமான பணிதானது!

ஆமாம்! எந்தத் தவறும் செய்யாத இக் குழந்தைகளுக்கான காப்பகங்கள் ஏராளமுண்டு. அவற்றின் கரங்




கண்முன்னே தாயை கற்பழித்து கொன்றகதை, பயங்கரவாதிகளாகப் பச்சை குத்திய தந்தையை பறி கொடுத்த கதை, பள்ளிக்குப் போன குழந்தையின் நெற்றியில் துப்பாக்கியால் புள்ளிவைத்த கதை, இப்படி

களுடன் எம் கரங்களையும் இணைப்போம். இதுபோன்ற இல்லங்களில் ஒன்றுதான் அன்பு இல்லம். சமூகத்தின் சீர்கேட்டினால் சிக்குண்டு சிதறிய அபலைகளுக்கு அன்பு காட்டும் ஒரு இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை அன்பு இல்லம் நிதிக்காக
கனடா தமிழர் மத்தியில்
நடத்தப்பெறும்



# அன்பரங்கம்

தமிழ்க் கலைஞர் விழா

152 அநாதைச் சிறாரின் தொடர்வாழ்வுக்கு
உங்கள் இதயக் கதவுகளைத் திறவுங்கள்!

**1995 ஜுலை 15 சனிக்கிழமை**
**பிற்பகல் 6.30 மணி முதல்**
**வின்சன்ட் சேர்ச்கில் கல்லூரி அரங்கில்.**

**தொடர்பாளர்கள்:**

'ரோஜா' (416) 425-2884
'இளையநிலா' (905) 472-6976
'கரன் கிறாப்' (905) 277-8613

ரோஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடியோ மாருதி
# VIDEO MARUTY INC

* Professional Video Productions
* International Video Transfer

தொடர்புகளுக்கு:~

ரொறன்ரோ

கிருபா (416) 751-8143

மொன்றியல்

(514) 989-5021 இன்பன்



# S.K. BALES DRIVING SCHOOL

★ குறுகிய காலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்தியடைந்த ஒரே ஒரு ஸ்தாபனம் - இதற்கு எம்மிடம் உண்டு ஆதாரம்.

★ 95% வீதிப்பரீட்சையில் சித்தியடையச் செய்யும் கடினமான வேலைக்கு எமது பாடசாலை பொறுப்பு; சாதாரண 5% உங்களின் உழைப்பு

★ 41% வாகனக் காப்புறுதி கழிவுச் சான்றிதழ் விரைவில் தரப்படும் மற்றொரு சேவை:

**S.K. Bales Institutes**

2627 Eglinton Ave. East
Suite # 3 & 5

Bus: (416) 265-1297
Res: (416) 265-3920

எஸ். கே. பாலேஸ்
(O.S.L)
(ஒன்றாரியோ பாதுகாப்புச் சபையில் அங்கீகாரம் பெற்ற மிகச் சிறந்த சாரதிப் பயிற்சியாளரும், முன்னாள் ஸ்கந்தா ஆசிரியரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ விதைத்த வினைகளை இன்று நனைய நனையச் சுமக்கின்ற ஒரு சுமைதாங்கி. ஈழத்தமிழ் நாட்டின் இனியதொரு நகரான திருகோண-மலையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் நடைபெற்ற இனவெறிக்குச் சான்று பகர்கின்ற ஒரு சன்னிதி.

இங்கே வாழ்க்கையை எதிர் நீச்சல் போடும் மொட்டுக்களின் எண்ணிக்கை நூற்றி ஐம்பத்தியிரண்டு. இந்த எண்ணிக்கை இன்னும் உயர்வதற்கான சாத்தியங்கள் அதிகமே தவிர இவை குறைக்கப்படும் வாய்ப்புக்கள் குறைவுதான்!

வாழ்க்கையென்றால் என்னவென்று அறியாத பால்ய வயது முதல் வாழ்க்கையை அறியத் துடிக்கும் வாலிப வயதுவரை இங்கு குழந்தைகளின் கும்பல்....

ருசிக்காகச் சாப்பிடுகின்ற மனிதர்கள் நிறைந்த இந்த உலகில் இவர்கள் பசிக்காகச் சாப்பிடுகிறார்கள். சாப்பிடுவதற்காகப் பலர் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்வதற்காகச் சாப்பிடுகிறார்கள்.

பிஞ்சு உள்ளத்தில் ஏற்படும் இவர்களது ஒவ்வொரு உணர்வுகளும், ஆசைகளும் வடிகால்களின்றியே வற்றிப் போகின்றன. சின்ன வயதிலேயே இவர்களின் பாதை கல்வியை நோக்கியே காலடி வைக்கிறது. வஞ்சித்து விட்ட சமூகத்தின் கண்களை கல்வியினால் திறக்கவென்று இவர்கள் கவனம் செலுத்துகிறார்கள்!

உண்ணப் போதிய உணவில்லை, உடுக்கப் போதிய உடையில்லை, படுக்கப் போதிய இடமில்லை... இவர்கள் செய்த தவறென்ன? யாரோ செய்த சதியினால் இவர்களுக்கு இந்தக் கதி?

இந்த நிலையை மாற்ற முடியாதா? ஏன் முடியாது! நிச்சயம் முடியும்! வாழ்க்கை வஞ்சிக்கப்பட்ட இந்தக் குழந்தைகளுக்கு எதிர்காலம் ஒன்றை உருவாக்குவோம்! இறந்துபோன எங்கள் இனத்தவரின் குழந்தைகளை இருப்பவர்கள் பொறுப்பெடுப்போம்! உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! நம்பிக்கையை இழந்து நலிவுறும் இவர்களுக்கு எங்கள் அன்புக் கரங்களின் மூலமாக அபயமளிப்போம்! துன்பங்களை மட்டுமே துணையாகக் கொண்ட இவர்களுக்கு அன்பு கொடுத்து அரவணைப்போம்!

அன்பு நெஞ்சங்களே! இது வாசிப்பதற்காக மட்டுமல்ல! வாழ்க்கையின் ஓரத்தில் வஞ்சிக்கப்பட்ட அன்பு இல்லக் குழந்தைகளுக்கு நீங்கள் வாரி வழங்க வேண்டும்! அவர்கள் கடந்து வந்த பாதையின் கசப்புக்களைக் களைய வேண்டும்! உங்கள் துயரங்களோடு பங்குகொள்ள நாம் துணைவருவோமென்று உரத்துச் சொல்ல வேண்டும்! அவர்களின் ஒவ்வொரு காலடியையும் வெற்றிப் படிகளாக்க உறுதி கொள்வோம்! அவர்கள் வாழ்க்கையை வஞ்சித்த இனவெறியை நாம் வஞ்சிப்போம்!

★★★

**அடுத்த இதழில்....**

'அன்பு இல்லம்' பற்றிய பயணக் கட்டுரை எதிர்பாருங்கள்.

"எதிர் நீச்சல்" (சிறுகதை)

சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொன்மில்ஸ் சிவப்பிரகாசத்தின்... ராசுக்குட்டி அய்யா

ராசுக்குட்டியர்! ராசுக்குட்டியர் என்ன கோடை தொடங்கி விட்டுது மரம் மரமா தேடி திரியிறியல் இஞ்சை! இது ஊர் என்று நினைச்சியளே மரத்துக்குப் பின்னாலை நிண்டு அடிக்க கோதாரி இக்கணம் வெளியான் கண்டா பொலீசுக்கு அடிச்சு பெரிய கலவரம் படுத்தப் போறாங்கள்!

அந்த 'பார்க்கில் மரங்களைப் பார்த்த படி அலைந்து திரிந்த ராசுக்குட்டியரை பார்த்து கேட்டார் முருகேசர்.

எட! சீ முருகேசு உனக்கென்ன விசரே! அதெல்லாம் இந்த நாட்டிலை செய்ய முடியுமே? அதுக்கெல்லாம் சுதந்திரம் வேணும்பார்.

ஏதோ கனடா சுதந்திர நாடு, நாடு எண்டிறாங்கள் இந்த சின்ன விசையத்துக்கு நான் இருக்கிற 20ம் மாடிக்கு போக வேண்டி இருக்கு. எட நான் அதுக்கு அலைய இல்லை, இஞ்சைவா! நீ வந்ததும் நல்லதுக்குத்தான் இஞ்சை பார்!

## கனடா தான் தோன்றி கொண்டலடிப் பிள்ளையார்

இந்த மரத்தைப் பார் இனி கோடை தொடங்கி இதிலை மஞ்சளா பூ பூக்கப் போகுது என்று நிறுத்திய ராசுக்குட்டியரை தொடர்ந்து கேட்டார் முருகேசர் "ஏன் மஞ்சள் பூ பூத்தா என்ன" எட முருகேசு உனக்கு மூளை அந்தக் காலத்திலும் மந்தம், இப்பவும் அப்பிடி த்தான் கிடக்கு. இந்த மரத்தை வடிவா உத்துப்பார் என்ன தெரியுது இஞ்சை பார் இந்த குமிழ் விழுந்த இடத்தை என்ன மாதிரி தெரியுது. எட! ஊரிலை இப்ப விறகுக்குப் பஞ்சம் இல்லை உதை ஏன் பார்க்கிறியள் என்ற முருகேசரை எட உனக்கு விறகு புத்தி எட நான் அதை சொல்ல இல்ல இதை பார்க்க பிள்ளையாரின்ரை துதிக்கை



மாதிரி இல்லையே என ஆவலாகக் கேட்டார் ராசுக்குட்டியர்.

ஓ.... அது மாதிரியும் இருக்கு....... அதுக்கென்ன இப்ப...... இழுத்தார் முருகேசர்.

ஆ... அப்பிடிவா... இஞ்சை, இஞ்சை.. வா... சொல்லுறன் இந்த கல்லைக் கொஞ்சம் பிடி பாரமாக் கிடக்கு என முருகேசரை உதவிக்கு அழைத்தார் ராசுக்குட்டியர்.

குட்டியர் உங்களுக்கென்ன விசரே? சும்மா கிடக்கிற கல்லை என்னத்துக்கு பிரட்டிறியள்? என சலித்துக் கொண்டார் முருகேசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு....... முருகேசு........ இது வைரம் பாஞ்ச உடம்பு இந்த நாட்டில வந்து சும்மா இருக்காது இந்த ஊரைப் பத்தி உனக்குத் தெரியாது நான் அறிஞ்சு வைச்சிருக்கிறன். வெள்ளையளுக்கு கொம்பியூட்டர் போல பெரிய வேலையளுக்குத்தான் மூளை கண்டியோ! சின்ன விஷயத்தை கோட்டை விட்டுவிடுவான் ஏன் பெரிசா சொல்ல நேற்று உந்த வாசிக சாலைக்கு போன னான் சீனகாற பொடியன் வெள்ளையன் எங்கட தமிழ் பொடியன் எல்லாரும் சுத்தி இருந்தாங்கள். எங்கடை பொடியன் ஒருவன் ஏதோ காட்டிக் கொண்டிருந்தான். என்னடா எண்டு எட்டிப் பார்த்தன் கைவிரல் இரண்டை நீட்டி அதிலை எச்சிலிலை ஒரு கடதாசியை ஒட்டிப் போட்டு மாறி, மாறி விரலை மடக்கி அடிக்க அது அங்கையும் இங்கையுமா மாறி மாறி பாயிறது மாதிரி ஒரு சேட்டை.

எட நாசங்கட்டுவாங்கள் வாயை பிழந்தபடி How come? How come? எண்டு கேட்டபடி நிக்கிறாங்கள்.

கண்டியே எங்கடை நாட்டு மந்திர தந்திரங்களை? என்ற ராசுக்குட்டியர் முக்கி முனகியபடி சிரமப்பட்டு தான் எடுத்த கல்லை அந்த மரத்தோடை சாத்தி விட்டார். அப்பாடா.... இப்ப சரி என பெருமூச்சு விட்ட ராசுக்குட்டியர் முருகேசு........ இந்தா இதைப் பிடி வாறன் என்றபடி மடியுக்கை கைவிட்டு ஒரு சரையை எடுத்து அதற்குள் கிடந்த கற்பூரத்தை எடுத்து கல்லில் வைத்து கொழுத்தினார்.

ராசுக்குட்டியள் என்ன செய்யிறியள்? முருகேசர் விளித்தார். எட முருகேசர் இவர் தான் கனடா தான்தோன்றி கொண்டலடி பிள்ளையார் என்றவர் தொடர்ந்து முருகேசர் "தோன்றில் புகளோடு தோன்று" என்று சொல்லுவினம் ஊருக்கு நான் போகப்போறன் ஆனா கனடா இருக்கும் வரைக்கும் என்ரை பெயர் இருக்கும். நாளைக்குப் பின்னேரம் இந்த இடத்தை வந்து பார் எத்தனை சனம் இதைப் பார்த்து பிள்ளையாருக்கு எத்தனை கதை சொல்லி விழா கொண்டாட்டம், நேத்தியள், பிரதஷ்டை, கொண்டலடி V.D.O சேவீஸ், தான் தோன்றி பிள்ளையார் விலாஸ், கொண்டல் தந்த தென்றல் றெஸ்ரோறன்ஸ், கொண்டலடி கல்யாண மண்டபம் பிள்ளையார் முன் தாலிகட்டு இப்பிடி எத்தனை பேருக்கு உழைப்பை ஏற்படுத்தப் போகுது என முடித்தார் ராசுக்குட்டியர்!

எட ராசுக்குட்டியர் உங்கட மூளையும் மூளைதான். இஞ்சை இந்த நாட்டிலை இப்ப வேலையில்லா திண்டாட்டம் தானே பெருகி கிடக்கு உங்கடை இந்த வேலையால எத்தனை சனங்களுக்கு வேலைவாய்ப்பு........, பரவாயில்லை பரவாயில்லை என ஆமோதித்தார் முருகேசர்.

அதுசரி ராசுக்குட்டியர் இதைப்பற்றி ஆருக்கும் சொன்னாத்தானே விளங்கும் என சந்தேகத்தை இழுத்தார் முருகேசர்.

இதைப்பற்றி நீ யோசிக்காதை முருகேசு உனக்கும் எனக்கும் காதோடை காது இருக்கட்டும் வள்ளி அம்மையை பகடை காயா வைச்சா அது ஊருக்கு என்ன? உலகத்துக்கே சொன்னது மாதிரி என்ற ராசுக்குட்டியர், கொண்டலடிப் பிள்ளையார் அப்பா நீ தான் துணை என்று பக்கத்தில் வந்த தமிழ் கனேடிய இளஞ்சோடிகளின் காதுபட உருகி கத்தினார்.

ராசுக்குட்டியரைப் பார்த்ததும் அந்த தமிழ் வாலிபன் உடனே மரத்தை மூன்று தடவை சுற்றி அப்பனே என கும்பிடவும் தொடர்ந்து பெண் முறையாக மரத்தை விழுந்து நமஸ்கரித்தபடி அப்பால் செல்லும் போது ஐயோ இஞ்சை பாரும் அப்பா முருகண்டியான் மாதிரி பிள்ளையார் இஞ்சை தோன்றி இருக்கிறார். எங்கடை அப்பாட்மென் காரருக்கு இன்னும் தெரியாது போல என்றபடி சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அப்பால் சென்றதும் ராசுக்குட்டியர் கண்டியலே எங்கடை சனத்தை ஏன்? எதுக்கு? என்று ஏதாவது கேட்டனியோ பார் இதுதான் நான் சொல்லுறன் எங்கடை சமுதாயம் முன்னேறி விட்டுது எண்டு சொல்லுகினம் எங்கை?

ஒருத்தன் ஒண்டை செய்தா அதுக்குப் பின்னாலை அதை பரம்பரை பரம்பரையா செய்வினமே தவிர காரணம் செய்தவனுக்கு மட்டும்தான் தெரியும் எண்டதுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

நல்லா சொன்னியள் ராசுக்குட்டியர் எங்கடை சனங்களின்ரை மூளை உலகத்திலேயே முன்னணிதான் ஆனால் இந்த சம்பிரதாயங்கள் அப்பிடி இப்பிடி எண்டு செய்யினம் அதைத்தான் விளங்காமல் செய்யினம் என்று தொடர்ந்த முருகேசர், அண்டைக்கு ஒரு கோயிலுக்கு போயிருந்தன் என்னோடை வேலும் மயிலும் வந்திருந்தார். மனுசனுக்கு வாதக்குணம் கண்டியளே, தலையிலை லொஞ்சம் சுழுக்கு மாதிரி தலையை அங்காலையும் இங்காலையும் ஆட்டுற வழக்கம். மனுசன் வெங்கடேஸ்வர பெருமானை கும்பிடேக்கை தலையை அங்கையும் இங்கையும் இழுத்து இழுத்து கும்பிட்டதை பக்கத்திலை நிண்டவன் கண்டு போட்டு ஓ........ பெருமானை கும்பிடேக்கை இது சம்பிரதாயம் எண்டு நினைச்சான் போல அவனும் அப்பிடி செய்ய பக்கத்திலை வீதி சுத்தி வந்த ஆச்சியும் அப்பிடி செய்து போட்டு பக்கத்திலை பேரப் பொடியையும் அப்பனே பெருமாள் சாமி தலையை ஆட்டி கும்பிடு மேனை எண்டு பேரக்குழந்தையை சொன்னது காதிலை விழுந்திது என முடித்தார் முருகேசர்.

சரி.... சரி.... வா முருகேசு நாங்கள் போவம் நாளைக்கு வந்து பார்ப்பம் என்ன நடக்குது எண்டு நடையை கட்டினார் ராசுக்குட்டியர்.

★★★




## ஒருவர் மட்டும் வாழும் ஊர்

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ஆள்! என்ன யோசிக்கிறீர்கள்? லெஸ்டர் எனும் கிராமத்தில் கெர்ட்டு மர்பி எனும் மூதாட்டி மட்டுமே வசிக்கிறார். இவருக்கு வயது 91. இவரைத் தவிர இந்த ஊரில் வேறு யாருமே இல்லை! இவருக்குப் பிறகு ஆளே இல்லாத ஊராகிவிடும் இந்த லெஸ்டர் கிராமம்.

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
# &
# BST INSURANCE BROKERS
## சர்வதேச காப்புறுதி + நிதிச் சேவை



**A.Veluppillai**
**(Life Consultant & Insurance Broker)**
**காப்புறுதி ஆலோசகர்**

வாகனம், நெருப்பு, வீடு, குத்தகைக்காரர், படகு, தொழிற்சாலை, விபத்து, கடன், தனிப்பட்ட, மூலதனம், கல்வித்திட்டம், வாழ்க்கை, சுகாதாரம், வர்த்தகம், வலது குறைந்தோர், பிரயாணம், அடமானம், பணம் மீழல், வாழ்க்கை முழுவதும் காப்புறுதி தவணை வாழ்க்கை காப்புறுதி, குறிப்பிட்ட கால காப்புறுதி, குடும்ப காப்புறுதி, குறுகிய கால பணம் செலுத்தல்

Nine continuous years in Canadian Insurance Industry
Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance
கனடாவில் 9வருட காப்புறுதி அனுபவமுள்ள ஆலோசகர் எப்பொழுதும் சிறந்த தேவைகள் உங்களுக்குண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

*அழையுங்கள்:-*

**Tel: (416) 755-4849**
**Fax: (416) 755-8449**

**2425 Eglinton Ave. E.,**
**Suite. 217, Scarborough, Ont. M1K 5G8**

We represent oldest, largest, leading, well managed mutual and stock insurance companies.
We shop around, the BEST for our client's needs, Affordability, and choice.

**We arrange all types of Insurance**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**


ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**

# YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

**Photocopying & Fax Services**

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



## யாழ்ரன் மார்க்கற்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

தயாரிப்பு:
~ எஸ். பாலச்சந்திரன் ~

இலங்கையின் பிரபல ஹோட்டல்களில் ஒன்று கலதாரி. இங்கு ஒரு வானொலி நிலையம் இயங்குகிறது. இதுவே இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் வானொலி நிலையமாகும். இது Fm 99 கீழைத்தேய வானொலி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. Fm 99 அலைவரிசையில் வான் அலையில் மிதந்து காற்றோடு பவனி வந்து ரசிகர்களின் செவிப்புலன்களைக் குளிரச் செய்யும் இந்த வானொலி நிலைய அதிகாரி S. தில்லைநாதன் அவர்களையும், அறிவிப்பாளர்களில் ஒருவரான சீனிவாசகம் ஸ்ரீகரன் அவர்களையும் Fm 99 வானொலிக் காரியாலயத்தில் சந்தித்தேன்.

வணக்கம் தில்லைநாதன் அவர்களே

*வணக்கம் S. பாலச்சந்திரன் அவர்களே*

இந்தத் தனியார் வானொலி நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி உண்டானது?

*"பல்வேறு முனைகளிலிருந்து நான் கற்ற அனுபவங்கள். குறிப்பாக முன்பு நான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றியிருக்கிறேன், அதுமட்டுமல்ல இலங்கை பாராளுமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றியிருக்கின்றேன். அதை வைத்துக் கொண்டு வானொலிச் சேவையை ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் எனக்கேற்பட்டது"*

எத்தனை வருடங்களுக்கு முன் இந்த வானொலிச் சேவையை ஆரம்பித்தீர்கள்? அதன் போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

*"மூன்று வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தோம். ஆரம்ப நாட்களில் விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ளுமுகமாக ஒவ்வொரு வர்த்தக நிறுவனங்களுக்கும் நாங்கள் ஏறி இறங்கியதோடு இந்த வானொலிச் சேவையைப் பற்றியும் விளக்கிக் கூறவேண்டிய ஒரு நிலையிலிருந்தோம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. விளம்பர தாரர்கள் தாமாகவே வந்து விளம்பரங்களைத் தருகிறார்கள்"*

(இவ்வாறு அவர் கூறுகையில் வர்த்தகப் பெருமகன் ஒருவர் விளம்பரம் சம்பந்தமாக பேசுவதற்கு வந்திருந்தார்)

அதுசரி தில்லைநாதன் அவர்களே இங்கு கடமையாற்றும் அறிவிப்பாளர்களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

*"கல்வித் தகைமை, குரல் வளம் இவற்றின் அடிப்படையில் அறிவிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.*

இவர்களுக்குப் பயிற்சி அளித்தது யார்?

*நான் பயிற்சி அளித்துள்ளேன். இலங்கை வானொலி முதன்னை அறிவிப்பாளர் ஜோச் சந்திரசேகரன் அவர்கள் செய்தி வாசிப்பில் பயிற்சி அளித்திருக்கிறார்.*

உங்கள் வானொலி அறிவிப்பாளர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*"இன்று இவர்கள் நேயர்கள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்திருக்கிறார்கள் என்பதை அறியும் போது மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்"*

உங்கள் Fm கீழைத்தேய ஒலிபரப்பை இலங்கையின் எந்தெந்தப் பகுதிகளில் கேட்கலாம்?

*"கொழும்பு, கண்டி, நுவரெலியா, தலவாக்கொலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் துல்லியமாகக் கேட்டலாம்"*

இதே அலைவரிசையில் சிங்கள ஒலி பரப்பும் இடம்பெறுகிறதே....

*"ஆமாம் சிங்கள ஒலிபரப்பும் நடைபெறுகிறது. அது வேறு நேரத்தில் நடைபெறுகிறது.*

உங்கள் வானொலியை எத்தனை பேர் செவிமடுக்கிறார்கள் என்பது பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடு ஏதாவது இருக்கிறதா?

" தமிழ்- சிங்கள ஒலிபரப்பை மொத்தம் 40 இலட்சம் நேயர்கள் செவிமடுக்கிறார் கள் என்று கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

உங்களுக்குத் தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா விருது கிடைத்திருக் கிறதாமே அதுபற்றி....

"இலங்கை கலைஞர்களுக்கு அவர்களின் கலைச் சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுள் நானும் ஒருவன். இந்த விருது Fm 99 வானொலிக் கலைஞர்களுக்கும் சேர்த்துக் கொடுத் ததாகவே எண்ணிக் கொள்கிறேன்.

தில்லைநாதன் அவர்களுக்கு ரோஜா சஞ்சிகை சார்பில் பாராட்டுதல்களைத் தெரிவித்து விட்டு அறிவிப்பாளர்களில் ஒருவரான சீனிவாசகம் ஸ்ரீகரன் அவர்களி டம் கேள்விகளைத் தொடுத்தேன்.

வருடங்களாக மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வருகின்றேன். வர்த்தக ஒலிபரப்பில் தனிமுத்திரை பதித்த காலஞ் சென்ற இலங்கை வானொலி அறிவிப் பாளர் K. S. ராஜா அவர்கள் எனது நண் பர். அவர் தந்த உற்சாகமும் ஒரு கார ணம். Fm 99 கீழைத்தேய வானொலிச் சேவையை ஆரம்பித் போது அறிவிப்பாள னாக கடமையாற்றும் வாய்ப்பு எனக்கு கிட்டியது"

உங்கள் வானொலியில் சினிமாப் பாடல் களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமென்ன?

"Fm 99 வானொலி நேயர்களின் விருப் பம் அதுவாகவே இருக்கிறது. எனவே தான் பெரும்பாலும் சினிமாப் பாடல் களை ஒலிபரப்புகின்றோம்."

பழைய பாடல்கள் காலத்தில் அழியா



FM 99 கீயைத்தேய வானொலி அதிகாரி திரு. எஸ். தில்லைநாதன், அறிவிப்பாளர் திரு. சீனிவாசம் ஸ்ரீகரன் மற்றும் வானொலிக் கலைஞருடன் "ரோஜா"வின் 'சந்திப்பு' தயாரிப்பாளர் எஸ். பாலச்சந்திரன்

நீங்கள் அறிவிப்பாளராக அறிமுகமான தெப்படி?

"அறிவிப்ப;ாளனாக வரவேண்டுமென்பது எனது நீண்டநாள் ஆசை. ஆத்ம வெறி என்று கூடச் சொல்லலாம். சுமார் 10

தவை. அவற்றை நீங்கள் அதிகம் ஒலிபரப்புச் செய்யாதது பற்றி.............

"Fm அலைவரிசையில் ஸ்டீரியோ முறை யில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல் களை ஒலிபரப்புவதே பொருத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்று நினைக்கிறேன். புதிய பாடல்கள் ஸ்டீரியோ முறையில் ஒலிப் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வப்போது பழைய பாடல்களையும் ஒலிபரப்பு கின்றோம்."

கலைஞர் சந்திப்பு என்று ஒரு நிகழ்ச்சி உங்கள் வானொலியில் பிரபலமானது. அதுபற்றி கூறமுடியுமா?

"கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக இந்த இனிய நிகழ்ச்சியை எமது ஒலிபரப் பில் இணைத்துக் கொண்டோம். கலைஞர் களை நேரடியாக பேட்டி காண்கிறோம். நேரடியாகப் பேட்டி காண்பதென்பது என்வரையில் ஒரு சுகானுபவம். குறிப்பாக தென்னிந்திய திரைப்பட பின்னணிப்பாட கர்களான T.M.S. P. சுசீலா, மலேசியா வாசுதேவன், சுபா, உன்னிமேனன், சாகுல்ஹமீது, மனோ, மின்மினி ஆகியோ ரைப் பேட்டிகண்டுள்ளேன். இந்த நிகழ்ச்சி ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளது."

Fm 99 கீழைத்தேய வானொலி மென் மேலும் வளர்ந்து சாதனைகள் பல படைக்க ரோஜா சஞ்சிகை சார்பில் மனமார வாழ்த்தி விடைபெற்றேன்.

## ஆ யூ ஒன் வெல்பயர்?



## அறிவித்தல்

இராமகிருஷ்ண சேவாச்சிரமம் எனும் பெயரோடு தமிழர் மத்தியில் ஓர் அழைப்பு இராமகிருஷ்ணபரமகம்சர், தூயஅன்னை, சுவாமி விவேகானந்தர் போதனைகளைப் பரப்பி வருகிறது. ஒவ்வொரு புதன்கிழமையும் பஜனை, பகவத்கீதை விளக்கம், தியான விளக்கம் போன்றவற்றைச் செய்து வருகிறது.

இடம்:- 272 மார்க்கம் வீதி, யாழ் பான்சி (கீழ்மாடி)

விஷேட தினங்களில் மிஸிசாகா வேதாந்த சங்க மண்டபத்தில் பஜனை நடத்துகிறது.

தொடர்புகளுக்கு: 429-2904, 769-7747, 431-5997

**அட்டைப் படத்தில் திருமலை 'அன்பு இல்லக்' குழந்தைகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லில் நார் உரித்த கபில்தேவ்

கிரிக்கட் உலகில் சுழல் பந்து வீச்சாளர்களின் கோட்டையாக விளங்குவது இந்தியா. பிரசித்தி பெற்ற சுழல்பந்து வீச்சாளர்களான பேடி, சந்திரசேகர், பிரசண்னா சந்திரசேகர், வெங்கட் ராகவன் ஆகியோர்களை ஒரே காலத்தில் உள்ளடக்கிய இந்திய அணி 1970ன் ஆரம்பத்திலிருந்தது. ஆட்டித்தின் ஆரம்பத்தில் பந்தின் பளபளப்பு எடுபட முன்னரே அணித்தலைவர் சுழல்பந்து வீச்சினை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. பேடி (BEDI) அணித்தலைவராக இருந்த பொழுது ஆட்டித்தின் முதலாவது பந்தையே அவர் வீசவேண்டியிருந்தது. அந்தளவுக்கு வேகப்பந்து வீச்சாளர் இல்லாத குறை இந்திய அணிக்கு இருந்தது. இந்தியாவிற்கு வருகை தரும் எதிரணியர் குறைந்தது மூன்று சுழல்பந்து வீச்சாளர்களையாவது தம்வசம் வைத்திருப்பர். "கேவலம்! 80 கோடி மக்களில் ஒரு வேகப்பந்து வீச்சாளர் இல்லையா இந்தியாவில்" என்று ஒரு பத்திரிகை ஆசிரியத் தலையங்கம் தீட்டியிருந்தது.

1978ம் ஆண்டு 19 வயதுடைய இளைஞர் ஒருவரை, இந்தியத் தெரிவுக் குழுவினர் கண்டுபிடித்து பாக்கிஸ்தான் நாட்டுக்கு கவாஸ்கர் தலைமையில் அனுப்பினர். அந்த இளைஞன் வேறு யாருமல்ல, கிரிக்கட் உலகில் எல்லோர் வாயால் உச்சரிக்கப்படும் கபில்தேவ் தான். ஹரியானா மாநிலத்தில் பிறந்தவரான கபில்தேவ் 16 ஆண்டுகள் கிரிக்கட் ஊலகில் பல சாதனைகள் புரிந்து 1994ம் ஆண்டு இறுதியில் ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெறும் போது தனது வேகப்பந்து வீச்சின் மூலம் 434 டெஸ்ட் விக்கட்டுகளை கைப்பற்றி நியூசிலாந்து வீரர் சேர் றிச்சாட் ஹட்லியின் 431 விக்கட் சாதனையை முறியடித்துள்ளார். உலகிலே ஆகக் கூடிய டெஸ்ட் விக்கட்டுகளை வீழ்த்தியது மட்டுமல்லாது 5248 ஓட்டங்களை 8 சதங்களின் உதவியுடன் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணியில் ஆகக்கூடிய டெஸ்டுகள் விளையாடிய பெருமையும் இவருக்கு உண்டு. 'He Bowled fast in the loud of Spcie' என்று பிரபல பிரிட்டின் நேர்முக வர்ணனையாளர் கூறினார். அதாவது 'கல்லில் நார் உரித்தார்'



என்பதுதான் அவர் விளையாடிய காலங்களில் ஆரம்ப பந்து வீச்சாளராகவும் இடைவரிசை ஆட்டக்காரராகவும் சிறந்து விளங்கினார். 1983ம் ஆண்டு இவரின் தலைமையின் கீழ் உலகக் கோப்பையை வென்றெடுத்த நிகழ்ச்சியே வாழ்நாளில் மிகவும் மறக்க முடியாது என்கிறார் இந்த கபில். இவர் ஆடிய 131 டெஸ்டுகளில் எந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரணி ஜுவலறி




## Thaarani Jewellery

- Diamond Cut & Other Bangles
- மகரப் பதக்கம்
- சிங்கப்பூர் நகைகள்

அனைத்து நகைத் தேவைகளுக்கும்... நகரில் சிறந்த கைவேலைப்பாட்டுடன் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

(416) 289 6556

3630 Lawrence Ave. E., Unit 03, Scarborough (Markham & Lawrence) ON.

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant

இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள்
விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி
வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது *GASA!!!*

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | **$4.75** |
| * 10 Chicken Wings with Fries | **$3.99** |
| * 5 Chicken Wings with Fries | **$1.99** |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | **$3.99** |
| * 2 ரொட்டி + கறி | **$2.99** |

**Tel: (416) 321-1219**

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திலுமே காயம் அல்லது சுகயீனம் காரணமாக விளையாட்டில் ஈடுபடாமல் இருக்கவில்லையென்பது இவரின் உடல் வாகுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இவர் ஓய்வு பெற்றதன் மூலம் இந்திய அணியில் நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுள்ளது.
என்ன இருந்நாலும் கபில்தேவ் என்ற நாமம் உலகின் சிறந்த சகலதர ஆட்டக்காரர் (ஆல்ரவுண்டர்) வரிசையில் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

*****

## ~ வாசு ~

★ இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஒருநாள் கிரிக்கட் போட்டியில் (MASTERS TOURNAMENT) விவியன் றிச்சாட்ஸ் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது. ஏழு நாடுகள் கலந்து கொண்ட இப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்த்து மேற்கிந்திய தீவுகள் அணி விளையாடியது. உலகின் முன்னாள் கிரிக்கட் ஜம்பவான்கள் விளையாடிய இவ்வாட்டங்கள் ரசிகர்களுக்கு பெருவிருந்தாக அமைந்தது.

★ அண்மையில் நியூசிலாந்துக்கு விஜயம் செய்த இலங்கை கிரிக்கட் குழு இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. டெஸ்ட் அந்தஸ்த்து பெற்று 13 ஆண்டுகளின் பின் இலங்கைக்கு வெளியே பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும்.

★ மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வரும் அவுஸ்திரேலிய அணி 5 பந்தயங்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டியில் 4-1 என்ற கணக்கில் தோல்வி கண்டது.

குத்துச் சண்டை:-

★ கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலிருந்த முன்னாள் அதிபர் குத்துச்சண்டை வீரர் மைக்-ரைசன் (TYSON) விடுதலை பெற்றுள்ளார். கூடிய விரைவில் அவர் போட்டிகளில் ஈடுபட இருப்பதாக செய்தியாளர்கள் மாநாட்டில் கூறியுள்ளார்.

★ இங்கிலாந்திலுள்ள மன்செஸ்தர் யுனைட்டெட் (MANCHESTER UNITED) அணியில் அங்கம் வகிக்கும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எரிக் கன்ரொனா (CANTONA) உதைபந்தாட்ட ரசிகர் ஒருவரை உதைத்ததன் காரணமாக சிறைத்தண்டனை பெற்றார். இதை எதிர்த்து மேன்முறையீடு செய்த கன்ரனாவிற்கு, நீதிபதி 120 மணித்தியாலம் சமூகசேவை செய்ய வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளார்.

★ அகில உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (FIFA) 1994ம் ஆண்டுக்கான சிறந்த வீரருக்கான விருது பிரேசில் நாட்டின் பிரபல முன்னணி ஆட்டக்காரரான ரோமாறியோ (ROMARIO) இற்கு கிடைத்துள்ளது. நூற்றிற்கும் மேற்பட்ட உதைபந்தாட்ட நிபுணர்களால் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட இவருக்கு அடுத்ததாக பல்கேரியாவைச் சேர்ந்த ஸ்ரொச்கோவ் (STOICHKOV) தெரிவானார். 1993ம் ஆண்டு விருது பெற்ற இத்திாலியைச் சேர்ந்த பாக்கியோ (BAGGIO) மூன்றாம் இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.

★ முன்னாள் டெனிஸ் வீராங்கனையான கிறிஸ் எவற் (CHRIS EVERT) சர்வதேச Hall of fame இற்கு ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 40 வயதுடைய இவர் 1989ம் ஆண்டு டெனிஸ் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெறும் போது 157 போட்டிகளில் வெற்றிவாகை சூடியது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷடம் தரும் இரத்தினக் கற்கள் (POWER OF GEMS & STONES)

ஓர் விஞ்ஞான ஆய்வு

~ சோதிடர் ஜெயா கந்தையா

அபூர்வ இரத்தினக் கற்கள் பற்றிய விபரங்கள் பழைய தமிழ் இதிகாசங்களிலும் ஐம்பெருங் காப்பியங்களிலும் ஆங்காங்கே வினாவிக் கிடக்கின்றன. தற்காலம்வரை ஒளிரும் இரத்தினக் கற்கள் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. சில கற்கள் அதிஷ்டத்தைத் தருவதாகவும் சில கற்கள் ஆபரணங்களிலும் அணிந்து கொள்ள நேர்ந்தால் பல சாம்பிராச்சியங்களே சிதைந்து போனதாக சரித்திரத்தில் சான்றுகள் உள்ளன. மும்ராஜ் சாயகானின் காதல் கூட இனிப்புக் கோளம் ஒன்றை வைரம் போல் துலங்கும் படியாக பட்டங்கள் தீட்டி மும்ராஜ் பரிசளிக்க அவள் திறமையை மெச்சியே திருமணத்தில் முடிந்ததாக கதைகள் உண்டு. வைரங்களை அணிபவர்களின் வடிவை மட்டுமல்ல அவர் ஆரோக்கியத்தையும் பாதுகாத்து உயர்த்துவதாக விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. வைரங்களின் காந்தம் சித்த வைத்திய முறையின் கீழ் கையாளப்படும் போது பல வியாதிகள் குணப்படுத்தப் படுகின்றன.

பிற கிரகங்களின் தாக்கங்கள் பூமியில் வாழும் உயிர் இனங்களைப் பாதிக்கின்றது என்பது விஞ்ஞான உண்மை. வெளிக் கிரகங்களிலிருந்து வரிம் ஒலிக் கதிர்கள் வெவ்வேறு இரத்தினக்கற்களின் இரசாயன உட்பிணைப்புக்களைப் பொறுத்து வேறுபட்ட வீதங்களில் உயிரினங்களின் மீது குவிக்கப் படுகின்றன. ஒவ்வொரு மனிதர்க்கும் சில கிரகங்களின் பார்வை விலத்தியே இருக்கும். அவற்றிலிருந்து வரும் கதிர்களை இவர்கள் உடலின் மீது கூடுதலான விகிதத்தில் குவிக்க முடிந்தால் அக்கிரகங்களால் இவர்களுக்கு ஏற்படும் பங்கம் தவிர்க்கப்படும். இதனைத்தான் வெவ்வேறு விதமான 86க்கும் மேற்பட்ட கற்களால் செய்ய முடிகின்றது என விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. ஒரு மனிதனுக்கு எந்த கிரகத்தின் கூடுதலான ஆளுமையுள்ளது என்பதனை முதலில் கண்டறிய வேண்டும். பின்னர் அந்தக் கிரகத்தின் கதிர்களை கவர்ந்து இழுக்கக் கூடியதாக பொருத்தமான கற்களை அவர் அணிந்து கொள்ள வேண்டும். ஆண்டவன் மனித குலத்தின் பாதுகாப்பிற்குத் தேவையான யாவற்றையும் பூமியிலேயே படைத்துள்ளான். நோய் நொடிகளுக்கு மருந்துகளாக நாடுகளில் மூலிகைகள் படைக்கப் பட்டுள்ளன. இதைப்போன்றே பூமியிலுள்ளும் கடலின் அடித்தளத்திலும் விலைமதிப்பற்ற பல கற்கள் படைக்கப்பட்டுள்ளன. எண்கணித சோதிட சாஸ்திரத்தின் அடிப்படையில் இவற்றை தேர்ந்தெடுத்து மனிதர்களின் தேவைக்கேற்ப அணிந்து கொள்வதால் பல நற்பலன்கள் விளைகின்றன.

உதாரணத்திற்கு ஒருவர் தனக்கு நவரத்தின கற்கள் பொருத்தம் என்று அறிந்தால் ஊனங்கள் அற்ற கற்களை மூன்று வரிசைகளில் பின்வரும் முறைப்படி மோதிரம் செய்யப்பட வேண்டும்.
முதல் வரிசை புஸ்பராகம், வைடூரியம், மரகதம்; இரண்டாவது வரிசை நீலம், மாணிக்கம், வைரம்; மூன்றாவது வரிசை கோமேதகம்,பவளம், முத்து.

இம்முறையில் மோதிரம் செய்யப்பட்ட பின்னர் இலகுவில் கிடைக்கக்கூடிய இரசாயனத்தாக்கம் தரக்கூடியதாக உள்ள பசுவின் கோசலம் அதால் இம் மோதிரத்தை குறைந்தது 1 மணித்தியாலம் வரை அதனுள் அமிழ்த்தி வைத்திருத்தல் வேண்டும். பின்னர் எலும்மிச்சம்பழச் சாற்றில் 1 நிமிட நேரம் வைத்திருந்து பாலால் கழுவி நீரினால் சுத்தம் செய்தல் வேண்டும்.இதன் பின்னரே அணிந்தால் பயன் ஏற்படும். அணியும் கல் உடலில் தொட்டுக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது மிகவும் அவசியம்.

குறைகள் அற்ற உண்மையான கற்களை ஒரு மனிதன் அணிந்தால் அவன் அதிர்ஷ்ட சாலியாக இருப்பது திண்ணம்.

அடுத்த இதழில் திருமணம் எங்கே நிச்சயிக்கப்படுகிறது? சொர்க்கத்திலா? அல்லது வேறு இடத்திலா? என்ற ஆய்வுக் கட்டுரையை எதிர்பாருங்கள்.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்டு ரசித்த காட்சி

கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு & டைரக்ஷன் செய்து B.R. விஜயலட்சுமி 'ஆசியாவின் முதல் பெண்மணி' ஆகிறார். படமெது என்ற கேள்வியை ரோஜாவில் கண்டவுடன் என்னை மீண்டும் இந்தப் படத்தைப் பார்க்கத் தூண்டியது. இப்படத்தில் S.P. பாலசுப்பிரமணியம் நன்றாக நடித்திருந்தாலும் ஜனகராஜ் நடித்த இந்தக் காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

பாலு நல்ல பாடகனாக பிரபல்யமான பின்னர் பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டி எடுப்ப தற்காக அவர் வீட்டிற்கு வந்திருந்தனர். அந்த சமயம் ஜனகராஜ் தன்னால்தான் பாலு இந்த நிலைக்கு வந்தார் என்று பெருமை பேசிக்கொண்டிருக்கும் வேளை பாலு அங்கே வருகிறார். பத்திரிகையாளர்கள் வணக்கம் சொல்ல அவரும் வணக்கம் சொல்கிறார்.

இன்று தமிழ் நாட்டில் பிரபல்யமான பாடகன் நீங்கள். இந்த நிலைக்கு வரக் காரணம் யார் என்று கூறமுடியுமா என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்கு ஜனகராஜ் தன்னைக் கூறப்போகிறார் என்றிருக்க பாலுவோ முதலில் தன் தாயைக் கூறி அவரே எனக்கு சிறுவயதில் சங்கீதம் கற்றுக்கொடுத்தார் என்றும் அடுத்ததாக மேடையிலும், திரைப்படத் திலும் தன்னை அறிமுகப்படுத்தியது எம். எஸ். விஸ்வநாதன் என்று கூறி கடைசி யில் (ஜனகராஜ் முகத்தை சுளித்துக் கொள்ளும் வேளை) எல்லாவற்றிக்கும் மேலாக தன் தாய் தந்தையரின் இடத்தி லிருந்து எனக்கு எல்லா வழியிலும் ஊக்கம் தந்த டாக்டர்.... (ஜனகராஜ்) ஐ சொல்ல வேண்டும் என்றதும் ஜனகராஜ் அழுது கொண்டு பாலுவின் தோளில் சாய் கின் றார்.



**~ ரவி ~**
ரொறன்ரோ

இந்தக் காட்சியே நான் கண்டு ரசித்த காட்சியாகும்.

**சினிமா... சினிமா...**

*முயன்றுபாருங்கள்!*

**ரா _ _ _ வை**

இது கமல் நடித்த படங்களில் ஒன்று...

சென்ற இதழில்....

**மூன்று முகம்**

சினிமா பக்கம் ~ 37



# வெள்ளை ரோஜா

~ சுரேஸ்

இரவு மணி பன்னிரண்டாகியும் சுமதியும் அவளது நாட்குறிப்பும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தன. சுமதியின் கற்பனைகள் பேனாவின் இதழுக்குப் புரிந்திருந்தால், அவளையும் அறியாமல் அவள் உள்ளத்திலிருப்பது எழுத்துக்களாக, "ரகு மை சுவீட் ஹாட்" என்று முத்தமிட்டுக் கொண்டிருந்தது.

யார் இந்த ரகு? இவளது காதலனா? இல்லையென்றால், ஏன் இவளது இதயம் இவனை சுமந்து கொண்டிருக்கின்றது?

ரகு திருமணமாகி மூன்றாம் வருடத்திலேயே மனைவியை பறி கொடுத்தவன். ஒரு வயது நிரம்பிய மகனை மட்டுமே துணையாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ரகுவும், சுமதியும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்கின்றார்கள். அதில் ஏற்பட்ட அறிமுகம், நாளடைவில் நட்பாக மாறியது. ரகு வேலைக்கு சற்று தாமதமாக வரும் போதெல்லாம், ஏன், என்ற கேள்விக்கு "மகனை டேகெயாரில் விட்டுவிட்டு வர நேரமாயிட்டுது" என்று சொல்லும் போதெல்லாம் அவன்பால் அவளுக்கு ஒரு அனுதாபமே ஏற்பட்டது.

ஒரு நாளாவது அவனைப் பார்த்து பேசாவிட்டால் மனம் சஞ்சலப்படுவதை சுமதி அறிந்து கொண்டாள். "நான் என்ன ரகுவைக் காதலிக்கின்றேனா? அப்படியென்றால் இதற்கு வீட்டில் அப்பாவின் சம்மதம் கிடைக்குமா? ஒரு பிள்ளையோடு இருப்பவனை நீ எப்படி செய்யலாம் என்று திட்டி தீர்த்து விடுவாரோ! அதைவிட ரகு என் காதலை ஏற்பாரா?" கேள்விகளையும் கேட்டு பதிலையும் தனக்குத் தானே சொல்லிக் கொள்வாள்.

'வழமைபோல மதிய உணவு வேளை வந்தது'. அலுவலகத்தில் 'இன்றைக்கு எப்படியாவது என் மனதில் இருப்பதை அப்படியே போட்டு உடைக்க வேணும்' என்று தைரியத்தை குத்தகைக்கு வரவழைத்துக் கொண்டாள் சுமதி.

"என்ன சுமதி, பலமான யோசனை" ரகுவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். பின் ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு "ஒன்றுமில்லை ரகு" என்றவள் தொடர்ந்தாள். "புரட்சித் திருமணத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டாள். திகைத்தவன் சிரித்த படியே, "புரட்சித் திருமணம் ஒன்று எவ்வளவு வேகத்தில் அன்பு கத்தரிக்காய் என்று சேருகின்றார்களோ, அவ்வளவு வேகத்தில் உடைந்து விடுகிறது. பிறகு என்ன கோட்டில் விவாகரத்து என்று போய் நிற்கும்..." என்றான். பிறகு யோசித்த படி, "என்ன சுமதி நீங்கள் ஏதாவது புரட்சித் திருமணம் செய்யப் போகின்றீர்களா? என்றான். 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தாள் சுமதி. "முன்கூட்டியே என் வாழ்த்துக்கள்" என்றான். "எதற்கு வாழ்த்துக்கள்?,மாப்பிள்ளை நீங்கள்தானே? என்றவாறு தன் விருப்பத்தைச் சொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 Kumars
## SILK HOUSE

**1394 Gerrard Street East** **(416) 465-7131**

ரொறன்ரோ மாநகரில் முதன்முதலாக தமிழர் மத்தியில் புடவை வியாபாரத்தை ஆரம்பித்து வைத்த முன்னோடிகளான "6 Kumars Silk House" 3வது வருட நிறைவையொட்டியும் 4வது பிறந்த நாளையொட்டியும் வழங்க இருக்கும் பிரமாண்டமான

**மலிவு விற்பனை**

## விசேட குறிப்பு

**சில பொருட்கள் கண்டிப்பாக பொது மக்களுக்கு மட்டுமே விற்கப்படும்.**

**விலை விபரங்கள் பத்திரிகையில் பாருங்கள்.**



## Tel: (416) 465 7131

ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

**பிள்ளையார் ட்ரேடர்ஸ்**

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

**Tel: (416) 438-7746**

# பரடைஸ்

Since 1991

அச்சகம்

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய
வண்ணத்தில் தரமாகவும் விரைவாகவும்
பெற்றிட நாடுங்கள்

**Paradise Print Plus**

COMPLETE PRINTING & GRAPHIC DESIGNS

S.T

1231 Ellesmere Rd, # 204, Scarborough, Ont.

Tel:(416) 288-6449 Fax:(416) 288-0595


ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


னாள். உடனே, அவள் காதலை ஏற்க முடியாமல் மறுத்து விட்டான் ரகு. நாளடைவில் சம்மதித்தும் விட்டான்.

பிறகு சொல்லவும் வேண்டுமா? இருவரும் காதல் உலகில் பறந்தனர். வேலை முடிய சுமதி வீட்டிற்கு வருவது, நேரமாவதைக் கவனித்த அவளது தந்தை சுமதியின் போக்கை மெல்ல மெல்ல கவனிக்கலானார். அதன் பலனை கொஞ்ச நாளைக்குள் கண்டார்.

ஆமாம், அன்று ரகுவும், சுமதியும் சேர்ந்து கடைக்கு வந்திருந்ததைக் கண்டும் காணாதது போல் வந்துவிட்டார். மகளிடம் இதைப்பற்றிக் கேட்பதற்கடையில் ரகுவைப் பற்றி விசாரிக்கலானார். விசாரித்து அறிந்ததில் ரகுவைப் பற்றி திருப்தி அவருக்கு ஏற்படவில்லை. அதனால், இனி மகளோடு கதைத்து இந்தக் காதலை முறித்துவிட வேண்டும் என்று எண்ணினார்.

அன்று தருணம் பார்த்து காத்திருந்தவர், மகளிடம் பேச்சைத் தொடர்ந்தார் சுமதியின் தந்தை. "சுமதி நீ சின்னப்பிள்ளையில்லை நான் புத்தி சொல்ல. உனக்கே தெரியும் நீ பழகும் ரகு என்ன சாதி என்று. நாங்கள் என்ன சாதி என்று. அதோட அவன் ஒரு குழந்தைக்கும் தகப்பன். சாதகப் பொருத்தம் ஏதும் பார்க்காமல் கூடவா? இந்தக் கலியாணத்திற்கு நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன். அவனுக்குத் தான் தாரபலன் இல்லையே?" இப்படி பலவாறு ஏசிக் கொண்டிருந்தார் சுமதியின் தந்தை.

"நான் சாதியையோ, சாதகத்தையோ கலியாணம் செய்யவில்லை. எனக்குப்பிடித்த ரகுவைத்தான் செய்யப் போகின்றேன்". உறுதியாகக் கூறி முடித்தாள். நீண்ட வாக்குவாதத்தின் பின் தந்தை, மகளின் உரைகள் முற்றுப் பெற்றன.



மனம் ஒரு நிலையில் இல்லாததால் சுமதி ஒரு வாரம் வேலைக்குப் போகாமல் லீவு எடுத்து வீட்டிலேயே இருந்தாள். ஒரு வாரம் போவதே ஒரு யுகமாக இருந்தது அவளுக்கு.

நாளை திங்கட்கிழமை, பழையபடி சுமதி வேலைக்குத் திரும்ப வேண்டும். சற்று நேரத்தோடு படுக்கச் சென்றவளை கோலிங்பெல் தடுத்து நிறுத்தியது. யார் என்று அறிய கதவருகே சென்று கதவைத் திறந்தாள். வயதான ஒருவர் ரகுவின் குழந்தையோடு நின்றிருந்தார்.

"வாருங்கள், எங்கே ரகு.. என்றவாறு அவரை உள்ளே அழைத்தாள். வந்தவர் ஒரு கடிதத்தை சுமதியிடம் நீட்டினார். "இந்தக் குழந்தையையும் உங்களிடம் சேர்க்கச் சொன்னார். அவர் மார்படைப்பால் இறந்துவிட்டார். இன்றுதான் எல்லாம் ஒரு வாரத்திற்குள்........ எல்லாம் நடந்து முடிந்து விட்டது" பெரியவர் முடிக்குமுன்னே, சுமதிக்கு இந்த உலகமே சுற்றுவது போலிருந்தது.

கடிதத்தை அவசர அவசரமாக பிரித்துப் படித்தாள்.

அன்பின் சுமதிக்கு;

என் வாழ்வின் நாட்கள் மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டு விட்டன. நான் இந்தக் கடிதத்தை எழுதும் போது உன்னை நான் ஏமாற்றி விட்டேனோ என்றுகூட நினைத்தேன். அப்படி நீ நினைத்தால் என்னை மன்னித்து விடு. என் குழந்தையை ஒரு அனாதை விடுதியில் சேர்த்து விடு. என் விதியைப் போல இந்தக் கடிதத்தையும் முடி...

சுமதியின் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. கண்களில் நீர் 'குபகுபு' எனப் பாய்ந்தது. அழுதாள், கதறிக் கதறி அழுதாள். வயதானவர் கையில் இருந்த ரகுவின் குழந்தை... சுமதியிடம் தாவியது. 'கடிதத்தை எழுதி முடிப்பதற்குள் உங்கள் விதி முடிந்து விட்டதே ரகு. 'சாதி, ஜாதகம், விதி' என்னை ஏமாற்றியிருக்கலாம். ஆனால் நீங்கள் தான் என் கணவர் ரகு' என அவள் உள்ளம் முணுமுணுத்தது.

குழந்தையை அணைத்து முத்தமிட்டாள்.

★★★★★

# கவிஞர் சிவா சின்னத்தம்பி அவர்களுக்கு சிறப்புப் பரிசு



கொழும்பு தமிழ்ச் சங்கம் உலகளாவிய ரீதியில் நடத்திய கவிதைப் போட்டியில் கவிஞர் சிவா சின்னத்தம்பி அவர்களுக்கு சிறப்புப் பரிசு.

'வருக பொற்காலம்' என்ற தலைப்பில் உலகின் சகல கவிஞர்களிடமிருந்து கவிதைகளை சங்கம் வேண்டியிருந்தது. இதற்கான பரிசு கடந்த மாதம் சங்க மண்டபத்தில் பெருவிழாவாக இடம் பெற்றது. முதல் மூன்று பரிசுகளுடன் மேலும் பத்து பேருடைய கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு சிறப்புப் பரிசுகளும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

கனடாவில் வெளிவரும் சஞ்சிகைகள், விழா மலர்கள், பத்திரிகைகள், வானொலிகளில் இவரின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இக் கவிஞரின் கவிதைகளின் தொகுப்பொன்றை நூலாக வெளியிடும் முயற்சி ஆரம்பமாகியுள்ளது. வெகு விரைவில் இக் கவிதை நூல் வெளியிடப்படும். கவிஞருக்கு 'ரோஜா'வின் பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசங்கள்

~ B.R. ரஞ்சனி ~

எப்படி ஒருவருடம் உருண்டோடியதென்றே சூரியாவிற்கு தெரியவில்லை. பல்கலைக்கழகம் தொடங்கி வருடம் ஒன்று முடிந்து விட்டது.

A. L பரீட்சையில் நல்ல பெறுபேறுகளுடன் சூர்யா பாஸ் பண்ணியதை ராஜி கேள்விப்பட்டது தொடக்கம் ஒரு நாளாவது சூர்யாவை சந்திக்க மாட்டோமா என்று ஏங்கத்தொடங்கினாள்.

அவ் ஏக்கம் வெகு சீக்கிரம் நிறைவேறப் போகிறது என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

நல்லூர் கந்தனை உள்ளே தரிசித்து விட்டு தோழியுடன் வெளிவீதியால் சுற்றி வரும் போதுதான் சூர்யா தன்னருகே வந்து நிற்பதைப் பார்த்து ஒருகணம் திகைப்பும், மகிழ்ச்சியுமாக திணறிப் போனாள். இரண்டு பேரும் நகர இயலாத இடத்தில் சந்தித்து விட்டனர்.

ராஜி பஞ்சாபி உடையுடன் இரட்டை ஜடையுடன் மிகவும் சிறு பெண்ணாக சூர்யாவின் கண்களுக்கு காட்சியளித்தாள்.

"நல்ல ரிசல்ட் என்று கேள்விப்பட்டன் என்னுடைய வாழ்த்துக்கள் சூர்யா"

"தாங்ஸ் ராஜி, என்ன கனநாளா உங்களைக் காணவில்லை"

"நான் காணவில்லையா அல்லது நீங்கள் தான் கண்டும் காணாமல் போனீங்களா?"

அப்படியில்லை ராஜி, படிப்பு என்று இருந்தால்...! என இழுத்தான் சூர்யா

ஆமாம் ஆமாம் இனியென்ன டாக்டர் தானே மேலும் என்னுடைய வாழ்த்துக்கள்

அதுசரி ராஜி யார் இவ என்று ஏன் அறி முகப்படுத்தவில்லை.

"ஓ மறந்து விட்டேன் She is மற்றில்டா மற்றி என்று கூப்பிடுவோம்.

என்ன மாற்றில்டாவா உங்கள் நேம் என்ன கிறிஸ்டியன் நேமாக இருக்கிறது எப்படி இங்கு இந்துக் கோயிலில்

"ஏன் கிறிஸ்டியன் என்றால் வரக்கூடாதா. எனக்கு எம்மதமும் சம்மதம்தான்". ஆமாம் எங்களுக்கும் அப்படித்தான், கடவுளை மதம் என்ற பெயரில் ஏன்தான் பிரித்து மனிதர்களை வேறுபடுத்து கிறார்களோ தெரியவில்லை. மூவரும் கதைத்தபடி சென்றனர்.

சூர்யாவிற்கு பல்கலைக்கழக லீவு இன்னும் ஒரு வாரத்துடன் முடிந்து விடும். மருத்துவப் பிரிவு எடுத்துப் படிக்கத் தொடங்கி இரண்டு வருடம் என்ன மாதிரி உருண்டு விட்டது.

சூர்யா லீவிற்கு மஸ்கெலியாவில் வந்து நின்றான். அவன் தந்தை இங்கு தான் ஆசிரியராக இருந்தார். யாழ்ப்பாண பிரச்சனையால் தந்தை வேலை செய்யும் இடத்திற்கு சூர்யா குடும்பம் வந்து விட்டிருந்தனர்.

லீவுக்குக் கூட யாழ்ப்பாணம் செல்ல நேரம் கிடைக்கவில்லை சூர்யாவிற்கு. ராஜியை சந்தித்து பேச வேண்டும் போல் இருக்கும். ஆனால் எப்படிக் கதைப்பது அவளோ யாழ்ப்பாணத்தில், ராஜியும் நல்ல ரிசல்ட் எடுத்திருக்கிறாள் இந்த வருஷம். மெடிசின் நிச்சயமாகக் கிடைக்கும். இங்கு படிக்க வருகிறாளோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது யாழ்ப்பாணத்திலும் இப்போ படிக்கலாம் தானே என்ன டிசைட் பண்ணுவாள்.

சூர்யாவின் சிந்தனை நீண்டது. ராஜியை கனகாலம் பார்த்து விட்டாலும் அவனது நினைவில் அவள் அடிக்கடி வந்து தொந் தரவு பண்ணிய வண்ணம் இருப்பாள்.



சென்ற வாரம் சூர்யா கொழும்பு சென்ற போது ராஜியின் தமையன் ராஜனைக் கண்டு கதைத்தான். தன் ஊரவன் என்று ராஜன் சூர்யாவை தனது றூம்வரை கூட் டிச் சென்று உபசரித்தான். நல்ல பண்பு மிக்க மனிதன் எத்தனை மென்னையான பேச்சு. அவனது கள்ளம் கபடமற்ற மனதை இதன் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள் தான் புன் சிரிப்புடன் அகன்று விடுவர். ஆனால் கொழும்பில் சூர்யாவை ராஜன் கண்ட பொழுது தன் ஊரவன் என்று எத்தனை அன்பாக வரவேற்றான்.

தமது படிப்பு நாட்டு நடப்பு என்று பல கதைகள் கதைத்து ராஜியின் படிப்பி லிருந்து அவள் பெரடேனியாவில் தான் படிப்பது நல்லது என்ற வரை கதை வளர்ந்தது.

தேயிலை செடிகளை பார்த்த வண்ணம் யாவையும் திருப்பி நினைத்தபடி உலா வினான். செடிகள் பச்சைப் பசேலென்று எங்கும் ஒரேபோல் மிக அழகாக காட்சி யளித்தது. கொட்டும் அருவிகளின் இரைச் சலும் சிறு பெரிதாக வளர்ந்த சவுக்கு மரங்களும் மனதை மேலும் உற்சாகம் கொள்ள வைத்தது.

நாளை மறுதினம் பெரடெனியா புறப்பட வேண்டும். புதிய பறவைகள் வருவார் களே அவர்கள் சீனியரிடம் படும் அவஸ் தைகளை பார்த்து ரசிக்க வேண்டும் என றெல்லாம் நினைத்த வண்ணம் திரும்பி வீடு நோக்கி நடந்தான்.

வீட்டில் தமக்கை பத்மாவைத் தவிர அப்பா அம்மா வெளியே சென்றிருந்தனர். அக்கா பத்மாவிற்கு இருபத்து நான்கு வயதாகிறது. திருமணம் செய்யவென்று ஆட்கள் வருகின்றனர் தான். சீதனப் பிரச்சனையால் எல்லாமே குழம்பி விடுகிறது.

ஓரளவு படித்த மாப்பிள்ளையைச் செய் யவே ஒன்று இரண்டு என லட்சத்தில் கேட்கின்றனர். இதற்கிடையில் பெரிய படிப்பில் தேடினால் எப்படி சீதனம் கொடுப்பார்கள்.

"அக்கா, அப்பா அம்மா எங்கே சென்று விட்டனரக்கா. இருட்டி விட்டது இன்னும் காணேல்ல. ரீ மேக்கர் வீட்டை போயிட் டினமா...? காலையில் அப்பா கதைக்கும் போது இரண்டு மூன்று நாளாகிறது அங்கு போய் இன்று எப்படியும் போக வேணும் என்றவர் அதுதான் போய் விட்டனராக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீ மேக்கர் சிங்களவர் ஆனால் நல்ல மனிதர். மனைவி பிள்ளைகள் கூட இனபேதம் இல்லாது நன்றாகப் பழகக் கூடியவர்கள்.

யாழ்ப்பாணத்தில் என்னவென்றால் எப்போதும் சிங்கள ராணுவம் எம்மவரைத் தாக்குகிறது. எல்லா சிங்கள மனிதரும் ஒரே மாதிரியல்லவே. நல்ல மனிதருக்கு இந்த சிங்களவர் ஒரு எடுத்துக்காட்டு.

எங்கள் படிப்பால் தான் அம்மா யாழ்ப்பாணத்தில் இருந்தா. இப்போ அப்பாவுடன் இருக்கும் போது அம்மாவின் முகத்தில் தான் எத்தனை பொழிவு. ஏதோ இரண்டு மூன்று வயது குறைந்தது போல்.

என்ன சூர்யா ரீ வைத்தது கூட தெரியாது சிந்தனையிலிருக்கிறாய். திடுக்கிட்டு நிமிர்ந்தான் சூர்யா...

கம்பஸ் தொடங்கி இரண்டு மூன்று நாளாகியும் இந்த ராக்கிங் முடியவில்லை. காலையில் லேட்டாக வரும் சீனியர் மாணவர்களெல்லாம் நேரத்துடன் வந்து புதியவர்களை மடக்கி அவர்களை தர்ம சங்கடப்படுத்தவும் வெறுப்பேற்றவும் தொடங்கினர். சரியான வானரப் பட்டாளம் போல் ராக்கிங் செய்தனர்.

புதிய பெண்களைக் கண்டால் பெரிய வாலுகளுக்குக் கொண்டாட்டம். உன் பேரென்ன. பேரைச் சொன்னால், நல்லாயிருக்கு உனக்கு தங்கச்சி இருக்கா அக்கா இருக்கா, ஓம் என்றால் எனக்கு கேட்டுச் சொல்லுறியா என்றெல்லாம் கேட்டு கோபப்பட வைத்தனர்.

அப்போதுதான் ஒரு பெண்கள் கூட்டம் மெதுவாக வந்தனர். அவர்கள் நடையிலிருந்த தடுமாற்றமே அவர்கள் புதிய பட்டாம்பூச்சிகள் என்று தெரிந்தது.

அந்த கூட்டத்தினரிடையே நெஞ்சோடு நெஞ்சாக புத்தகங்களை அணைத்த வண்ணம் ராஜினி வந்துகொண்டிருந்தாள்.

"டேய் புதிய பறவைகள் வருதடா இன்று இவர்களில் ஒருத்தியையேனும் அழவைக்க வேணுமடா"

வாலு ஒன்று சொல்ல மற்ற வாலுகள் எல்லாம் ஆமாம் என்று சோராகப் பாடினர்.

"ஏய் நில்லுங்கடி" ஒருமையில் சீண்டத் தொடங்கினர். பெண்கள் நிற்காது நடந்தனர். காதென்ன செவுடுகளாடி.

"நீங்க முன்னால போனா நாங்க பின்னால கலைப்போம்" பாடியபடி அவர்களை போகவிடாது மறித்தனர்.

உன் பேரென்ன? நிர்மலா. உன்பேர் லதா. உன்பேரென்ன? ராஜினி. சொல்லும் போதே ராஜினியின் முகம் சிவந்துவிட்டது.

டேய் இதுகளில் இந்த ராஜி குட்டி டக்கராயில்லை. இந்த மான்குட்டி மட்டும் நிற்கட்டும் மற்ற எல்லாரும் போங்கடி. மானொன்று சிக்கி விட்ட சந்தோஷத்தில் குதித்தான் ஒருவன்.

மற்றப் பெண்கள் போகாது நிற்கப் போறிங்களா இல்லை கிட்ட நெருங்கினர் இருவர். ராஜியைத் தவிர மற்றவர் ஓட்டம் பிடித்தனர்.

ராஜியை சூழ்ந்து கொண்டனர். இடுப்பு இருபத்தியெட்டு மேலே முப்பத்தியிரண்டு இல்லையில்லை... முப்பது இடைமறித்தான் ஒருவன். ராஜிக்கு கோபத்தில் முகம் சிவந்து விட்டது. பல்லைக் கடித்தபடி நின்றாள்.

உன் வயதென்ன...? ஒருத்தன் முன்னால் வந்தான், ராஜி சொல்லவில்லை.

என்னடி பேசாது நிற்கிறாய் சொல்லுராயாடி அல்லது தலையை நிமிர்த்தட்டுமாடி.

என்னை யாரும் டீ போட்டதில்லை...... குனிந்தபடி சிடுசிடுக்கச் சொன்னாள்.

என்ன மகாராணிக்கு டீ பிடிக்காதாம் அப்போ கோப்பி பிடிக்குமோ...

ராஜி பேசாது நின்றாள். அப்போதுதான் சூர்யாவும், பாலாவும் வந்துகொண்டிருந்தனர். "டேய் சூர்யா அங்கை பாரடா இவங்கள் யாரோ தனிய ஒருத்தியைப் பிடித்து வைத்து கலாட்டா பண்ணுராங்கள். சூர்யாவுடன் வந்த பாலா கத்தினான்.

என்ன மிஸ் உடம்புக்கு போடுறனிங்கள், பாரினா அல்லது உள்ளூரா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேய் எதையடா கேட்கிறாய் சோப்பையா அல்லது மேலே...யா...., பாட்டாக இழுத்தது ஒன்று. ராஜி அவமானத்தால் கூனி குறுகி விட்டாள். கண்களில் நீர் முட்டி வழியத் தயாராகி விட்டது.

"டேய் பிரின்சிபல் வாரார் சூர்யா வேண்டுமென்றே பொய்யாக கத்தினான். வெருண்டு ஓடியது வானரக் கூட்டம்.

சூர்யாவும், பாலாவும் ராஜிக்கு கிட்ட நெருங்கினர். ராஜி அவமானத்தால் தலை குனிந்தபடியே நகராது நின்றாள்.

"மிஸ் இங்க பாருங்க அவர்கள் ஓடி விட்டனர், நீங்க எனி கிளாசுக்கு போங்க.

ராஜி எங்கே தான் அழுவது இவர்களுக்கு தெரிந்துவிடுமோ என்று குனிந்தபடி நின்றாள்.

இதோ பாருங்க மிஸ் சீனியஸ் எல்லாரும் நல்லவங்கதான் 'ராகிங்' என்றால் அவர்களுக்கு ஒரு சந்தோஷம். இதை பெரிது படுத்தாமல் விடுங்கள். பாலாதான் கூறினான்.

ராஜி மௌனமாகவே நின்றாள். லேசாக விசும்பல்வர பற்களை அழுத்தி கடித்தபடி. நின்றாள்.

சூர்யாவிற்கோ ராஜிக்கோ தெரியாது தாம் தாம் அருகருகே நிற்கிறோம் என்று.

வாங்க நீங்க, எந்த கிளாசிற்குப் போறீங்கள் என்று சொல்லுங்கள் கூட்டிச் சென்று விடுறம்...! சூர்யா அன்பாகக் கேட்ட போதுதான் மெதுவாக தலையை உயர்த்தி அவர்களைப் பார்த்தாள் ராஜி...

தொடரும்


ஜூன் இதழில்....

நேற்றுவரை நீயாரோ

சிறுகதை


# அப்படியா சமாசாரம்!

## உரசலும் புகாரும்

பிரான்சு - ஆங்கில கால்வாய்க்கு அடியிலான 'யுரோ ரனல்' அதிவேக புகையிரத சேவையினால் கொண்டுசெல்லப்படும் வாகனங்களில் உரசல்கள் ஏற்படுவதாக புகார்கள் அடிக்கடி தெரிவிக்கப்படுகின்றன.

## ஜப்பானின் பூகம்பம்

ஜப்பானில் இதுவரை நடந்துள்ள பூகம்பமும் இறந்தர்களின் தொகையும் 1923 செப் 1ம் திகதி - 142 807, 1944 டிசம்பர் 7ம் திகதி - 1223, 1945 ஜனவரி 13ம் திகதி - 2306, 1946 டிசம்பர் 21ம் திகதி - 1432, 1948 யூன் 28ம் திகதி - 3895, 1968 மே 6ம் திகதி - 52, 1993 ஜனவரி 15ம் திகதி - 2, 1993 மார்ச் 3ம் திகதி - 3008, 1993 மே 26ம் திகதி - 104, 1993 யூலை 12ம் திகதி - 229, 1994 டிசம்பர் 28ம் திகதி - 2, 1995 ஜனவரி 18ம் திகதி - 6000.

## பொருத்தம்

அமெரிக்காவில் லொஸ்சூன்சவாய் நகரில் 1994 ஜனவரி 17ம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதன் பின் ஒரு வருடம் ஒரு நாளின் பின் (1995 ஜனவரி 18ம் திகதி) கிட்டத்தட்ட அதேநேரம் ஜப்பானில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது!

## கீ.சூ.பெ. விசுவநாதம்

முத்தமிழ் காவலர் அண்மையில் மறைந்தார். ஆனால் 21 ஆண்டுகளுக்கு முன்பே தமக்கான சமாதியை ஏற்பாடு செய்திருந்ததுடன் தினசரி மாலை வேளைகளில் அங்குசென்று அழகுபடுத்தி அலங்கரித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டு லட்ச ரூபாவில் 'நக்மா' வின் நடனம்



விஜயதுர்க்கா மூவிஸ் எனும் புதிய பட நிறுவனம் தமிழ் தெலுங்கு இரு மொழிகளிலும் தயாரிக்கும் சினிமா ஸ்கோப் படம் 'சூர்ய நாயகன்'

மம்முட்டி, சுமன், நாசர், சரத்பாபு, நக்மா, மாலாஸ்ரீ மற்றும் தென்னக மொழிகளின் முன்னணி நடிகர், நடிகையர் நடிக்கிறார்கள். நான்கு மாநிலங்களின் முன்னணிக் கலைஞர்கள் நடிப்பதற்கேற்ப நான்கு மாநிலத்திலுமே இதன் படப்பிடிப்பு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. இப்படத்தில் எட்டு லட்ச ரூபா செலவில் போடப்பட்ட, பிரமாண்டமான செட்டில் 'நக்மா' ஆடியிருக்கும் நடனம் இன்னும் பல லட்சம் ரசிகர்களை நக்மாவிற்கு பெற்றுத் தரும். இந்த நடன அசைவுகளுக்குச் சொந்தக் காரர் பிரபுதேவா.

# "நாடோடி மன்னன்"

மணிவாசகம் இயக்கும் பத்தாவது படம் 'நாடோடி மன்னன்'. சரத்குமாரை வைத்து மணிவாசகம் இயக்கும் நான்காவது படம்.

சரத்குமார் - மீனா இணையும் மூன்றாவது படம். முதன் முறையாக 'மீனா' இதில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

சரத்குமார் நடித்த வேடனுக்குப் பிறகு வெளிநாட்டில் தயாராகும் இரண்டாவது படம். எம். ஜி. ஆர். இயக்கி நடித்த 1958ல் வெளியான படமான 'நாடோடி மன்னன்' பெயரைப் பயன்படுத்தியிருக்கும் மணிவாசகம் அதற்குக் கூறும் காரணம் "எம். ஜி. ஆர் மீது அதிக பற்றுக் கொண்டவன் நான், அதோடு மட்டுமல்லாமல் சரத்குமாரும் எம். ஜி. ஆர் ரசிகர். எனவேதான் இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தோம் என்கிறார்".

செருப்புத் தைக்கிற சாதாரண தொழிலாளியாக இருக்கும் சரத்குமார் உண்மை, உழைப்பு, தன்னம்பிக்கை காரணமாக வளர்ந்து இந்தியாவில் விரல் விட்டு எண்ணக்கூடிய கோடீஸ்வரர்களுள் ஒருவராகிறார். இதுதான் நாடோடி மன்னனின் கதை. தேவா இசையமைப்பில் காளிதாசன் நீண்ட இடைவெளிக்குப் பின் இந்தப் படத்திற்கு பாடல் எழுதியிருக்கிறார். இதைத் தயாரிப்பவர் ராஜேஸ்வரி மணிவாசகம். இணைத் தயாரிப்பு பட்டேல்.



## சினிமா சினிமா கேள்வி:

செந்தில் சித்திரபுத்தனாகவும் கவுண்டமணி யமனாகவும் தோன்றும் படம் எது?

*உங்கள் பதில்களை ஜூன் 05, 95க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.*

சென்ற இதழுக்கான சினிமா பதில்:

**'பாட்டு பாடவா'**

$25 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

**அ. சலீம்** *(ரொறன்ரோ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமிருந்து வலம்.

1. நியூஸிலாந்தின் தலைநகரம். அல்லது கனடாவில் தமிழ்ப்படம் திரையிடப்படும் தியேட்டர். அல்லது யாழ்ப்பாணத்தில் முன்பு காட்சி தந்த தியேட்டர்.
4. ஆ! கோ!
6. அலிபாபாவும் 40 திருடர்களில் திருடர்களின் வதிவிடம்.
7. நவீன பட்டிமன்றங்களில் அகப்பட்டு அல்லல்படும் சிலப்பதிகாரப் பெண்.
9. இலங்கை பஸ்களில் பெண்களுக்கான ஆசனத்தைக் குறிக்கும்சொல்.
11. அகதியா? அதிகமா? ஒரே குழப்பம்!
12. நவராத்திரி காலங்களில் சிறுவர்களுக்குப் பிரசாதமாகவும் கடவுளுக்கு நிவேதனமாகவும் கிடைப்பது.
15. இயற்கையாக அமைந்துள்ள இதனால் பிரசித்தமடைவது திருகோணமலை.
17. உங்கள் விடை சரி! பிறகு ஏன் கேள்வி?
18. பொறுமை.
19. இறுதி எழுத்தும் சேரின் வலியை உணர்த்தும்.
20. Mail bag?!
22. தசரதனின் தகப்பன். ராமனின் பேரன். லவனின் பூட்டன்.

## மேலிருந்து கீழ்.

1. பரிசு.
2. ராமரின் காலுக்காகக் கல்லாகிக் கிடந்தவன் இங்கு குழம்பியுள்ளான்.
3. வெடியோசை!
5. சில திரைப்படங்களில் இப்படியும் போடப்படும்.
8. விளக்கை அணைக்கத்துடிப்பதும்... அணைத்ததும் துடிப்பதும்... இந்தப் பூச்சி!
12. மனைவிமாரின் ஆயுதங்களிலொன்று!
13. சோலி.
14. ஆர். என். லோகேந்திரலிங்கத்தை ஆசிரியராகக் கொண்டிருக்கும் தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆங்கிலப் பெயர் உள்ள பத்திரிகையின் ஆசிரியர் ஜோண் டவுனிங்.
16. வானில் பறக்கும் கவிஞர்களது கற்பனைக்கு தூது செல்ல இதுவும் உதவும்.
17. இதனுடன் விலை சேர்ந்தால் மலிவு விலையாகும்.

## கீழிருந்து மேல்.

9. ஆனந்தவிகடன் காட்டுனிஸ்ட்.
11. சந்தோஷப்படு!
21. சேனைகளின் முகாம்.

ரோஜா வின்
**சொற் சிலம்பம்**
போட்டி
இல:- 3
தயாரிப்பு:
எஸ். ஜெகதீசன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா வின்

# சொற் சிலம்பம்

## போட்டி இல: 2

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட
மூன்று அதிஷ்டசாலிகள்:-

1. **ந. ராதிகா** (ரொறன்ரோ) $50
2. **க. சங்கர்** (ஸ்காபுரோ) $25
3. **க. வசந்தன்** (மொன்றியல்) $15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ந் | ர் | 2 பு | ■ | 3 கை | 4 ரே | 5 கை |
| ■ | ■ | 6 ச | தி | ர் | ளா | வு | தி |
| 7 பூ | 8 வ | 9 ர | சு | ■ | 10 ச | தி | ■ |
| 11 கு | ரை | ■ | ■ | 12 உ | ப | ■ | 13 மை |
| ர் | ■ | 14 சி | வ | ந் | தி | ■ | ளா |
| 15 ப | 16 தி | ர் | ■ | து | ■ | 17 பா | ப் |
| ர் | வ | ச | ■ | ச | ■ | னை | 19 பூ |
| ■ | தி | ன் | கு | க் | 20 ம | ■ | ர் |

**உங்கள் பதில்கள் யாவும் ஜுன் 05, 1995ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது Faxக்கோ அனுப்பி வையுங்கள்.**

**ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.**

**சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் மூவருக்கான $50, $25, $15 பரிசில்களை 'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்' ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.**


அனைத்து அச்சமைப்புத் தேவைகளுக்கும்
L. Krishoth Typesetting
TEL: (416) 425-2884


# வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் | சனி | ஞாயிறு | செவ்வாய் |
| மாலை | காலை 8.00-10.00 | காலை | மாலை |
| 9.00-10.00 | ஞாயிறு காலை 6.00-8.00 | 9.00-10.00 | 10.00-10.45 |

## RADIO ASIA - 530 AM அலைவரிசையில்...

**திங்கள் முதல் - வெள்ளி வரை**
**மாலை 8.30 - 10.00**
**சனி, ஞாயிறு :~ மாலை 9.00 - 10.00**

**'தமிழ் ஒலி'**
**ஞாயிறு மாலை**
**10.45 - 11.30**

**'ராகப்பிரவாகம்', 'சங்கராபரணம்', 'தமிழோசை', 'குங்குமம்'**

**'தமிழரங்கம் ':~ AM 1540 KHz - செவ்வாய் மாலை 10.45 - 11.30**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

★★ நம்பிக்கை நட்சத்திரம் ★★

எனது பெயர் அமுதா இரத்தினவடிவேல். நான் 1983 நவம்பர் 1ம் திகதி யாழ்ப்பாணத்தில் இரத்தினவடிவேல் பிருந்தா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வியாக பிறந்தேன்.

எனது தகப்பனார் சவுதி அரேபியாவில் வங்கி ஒன்றில் பணி புரிந்து கொண்டிருந்ததால் நான் எனது நாலாவது மாதம் முதல் பத்து வயது வரை அங்கு வசித்து வந்தேன். எனது அம்மா ஒரு நடன ஆசிரியை.

நான் முதலில் 'கொன்டினன்டல்' ஸ்கூலில் எனது ஆரம்பப் படிப்பைத் தொடங்கினேன். எனக்கு அமலா, அகலா என்று இரு தங்கைகள் இருக்கிறார்கள். 1990ம் ஆண்டு எனது தந்தையின் வேலையிடம் மாற்றம் காரணமாக சவுதி அரேபியாவின் தலை நகரமான றியாட்டிற்கு சென்றோம். அங்கு 'ஸ்ரீலங்கா எம்பசி' பாடசாலையில் 2ம் வகுப்பு தொடக்கம் 4ம் வகுப்பு வரை படித்தேன். பள்ளிக்கூட கலைவிழா, பரிசளிப்பு விழா ஆகியவற்றில் பங்கு பற்றினேன். கணித பாடத்தில் பரிசு பெற்றேன்.

நான் இலங்கை, இந்தியா, லண்டன், சுவிற்சலாந்து, பிரான்ஸ், ஜோர்டான், எகிப்து, அமெரிக்கா, குவைத்து, சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்குச் சென்று இருக்கிறேன். இத்தருணத்தில் கனடா வரும் வாய்ப்பு கிட்டவே 1993ம் ஆண்டு ஜனவரி மாதம் கனடா வந்தேன். இங்கு ஓகோணர் பப்ளிக் ஸ்கூலில் சேர்ந்தேன். தற்போது 6ம் வகுப்பு 'மிலன்வலி' பாடசாலையில் படிக்கிறேன். இங்கு நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளில் பேச்சு, பாட்டு, நடனம் ஆகியவற்றில் பங்கு பற்றி உள்ளேன்.

நான் 5ம் வகுப்பு படிக்கும் பொழுது 'வலவிக்ரோரிய'னாக தெரிவு செய்யப்பட்டது எனக்கு கிடைத்த கௌரவமாக கருதுகிறேன்.



தங்கைமாருடன் அமுதா

ஓகோனர் பொதுப் பாடசாலையில் இருக்கும் போது தமிழ் வகுப்பில் சேர்ந்து தொடர்ந்து தமிழ் படித்து வருகிறேன். தமிழ் வகுப்பு ஒழுங்கு செய்யும் கலை விழாக்களிலும் பங்கு பற்றி வருகிறேன்.

எனது சுயசரிதையை 'ரோஜா' சஞ்சிகையில் வெளியிடும் ஆசிரியருக்கும், எனக்கு கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP




உங்களின் சகல விதமான
திருத்த வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
உங்கள் மனநிறைவுக்கு
நாங்கள் உத்தரவாதம்.

- ***Tune-up***
- ***Brakes***
- ***Transmission & Engines rebuilt***
- ***Air-Condition***
- ***Body Work***

**Domestic, European & Japanese car & Vans.**

**We are specialized in**
**HONDA**




## *IRIE* CA SERVICES

**86 MELFORD DR, UNIT.5,**
**SCARBOROUGH, ONT.**




**தொடர்புகளுக்கு:~**
*S. Ruban*
**(416) 299-0452**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org